267

Registered No. M. 2095.

THE REGISTRAR OF BOOKS
7-MAR 1927
MADRAS

# ஞானோதயம்.

———x———

பிரம்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம், முதலிய
உயர்நல விஷயங்களைப் பரவச்செய்யும் ஓர்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

| தொகுதி 17 | 1927-ஞு பிப்ரவரி-மீ 11உ | பகுதி 8 |
|---|---|---|

பொருளடக்கம்.

1. இன்ப அரசு—மா. வெ. நெல்லையப்ப பிள்ளை ... 199
2. பத்திராதிபர் குறிப்புகள் ... 200
3. இறந்தவர்களை நாம் இழந்துவிடவில்லை. பாரத தர்மம் —(பத்திராதிபர் மொழிபெயர்ப்பு) ... 204
4. நான்: திவ்யஞான தீபிகை—(பத்திராதிபர் மொழிபெயர்ப்பு) 207
5. தாய்மார்களின் சங்கம்; ஹெரால்டு ஆப் தி ஸ்டார் —(பத்திராதிபர் மொழிபெயர்ப்பு) ... 212
6. திவ்யஞானஸாரம்—A. இராமஸ்வாமி சாஸ்திரிகள் ... 215
7. தியானக்கிரம விஷயம்—K. S. இராமச்சந்திரய்யர் ... 223

பத்திராதிபர்—V. இராமச்சந்திர நாயுடு, எனங்குடி.
தஞ்சாவூர் ஜில்லா.

———

சந்தா விபரம்:—
வருஷாந்தர உள்நாடு ரூ 1—0—0, வெளிநாடு ரூ 1—8—0,
தனிப்பிரதி ரூ 0—2—0.

———

பாலம் ஸ்ரீ இராமச்சந்திரா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

## பத்திராதிபர் விண்ணப்பம்.

சென்ற மாதம் தெரிவித்துக்கொண்ட விண்ணப்பத்தை சந்தா பாக்கியுள்ள நேயர்கள் அதிகம்பேர் கவனிக்கவில்லை. இரண்டொரு இடங்களிலிருந்து மாத்திரம் மணியார்டர் வந்தது. தயவுசெய்து சந்தாத்தொகையை செலுத்தாமலிருக்கிறவர்கள் அவசியம் உடனே மணியார்டர் செய்யவேண்டியது அவர்கள் கடமையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பத்திராதிபர்.

### நமது மாற்றுப் பத்திரிகைகளின் விளம்பரம்.

## புதுயுகம்.

இஃது, ஸ்ரீ ஜகத்குருவாம் பரமாசாரிய மூர்த்தியின் அவதார வருகையைப்பற்றி சென்ற 16 வருஷங்களாக உலகமெங்கும் பிரஸித்தப்படுத்தி அவர் நல்வரவை ஜனங்கள் அங்கீகரிக்கும்படி விசேஷப் பிரயத்தனங்களைச் செய்துவரும் உதயதிசை நக்ஷத்திர மஹாஸபையின் தமிழ் மாதாந்தப் பத்திரிகை. இதன் ஆசிரியர்: இராவ்ஸாகிப் ஈ. வி. கனகசபைப்பிள்ளை. வருஷ சந்தா ரூ 1-8-0

E. N. வெங்கடபெருமாள் நாயுடு. B. A.
"புதுயுகம்" ஆபீஸ் கௌரவத் தலைவர்,
பென்ஷன் தாசில்தார், வளையற்காரத்தெரு, ஈரோடு.

---

### சுதேச நண்பன்.

ஜனசமூக முன்னேற்றத்திற்காகச் சமரச நோக்குடன் உழைக்க முன்வந்திருக்கும் ஓர் சிறந்த செந்தமிழ் மாதப்பத்திரிகை. இதில் அரிய பல வியாசங்கள் படிப்பதற்கு வெகு ருசிமாய் வெளிவருகின்றன.

இதன் ஆசிரியர்: M. K. A. முஹம்மது இப்ராஹீம்.
"சுதேச நண்பன்," காரியாலயம்.
63, 29-வது வீதி, இரங்கோன்.

ஞானோதயம்.

—x—

பிரம்மஞான மாதாந்தப் பத்திரிகை.

தொகுதி 17 } 1927-௵ பிப்ரவரி-௴ 11௳ { பகுதி 8

ௐ ॥

# இன்ப அரசு.

# Kingdom of Happiness.

## ஆசிரியப்பா.

வல்லே யருட்குரு வருகிறா ருலகிற்கு
எல்லா மக்க ளிதயத் தினிலே
நல்லறி வன்பு நலமுற வளர்கவே ;
செல்லுஞ் செயலுஞ் செம்மைய தாகுக ;
பொல்லாக் கொடுமை போயொழி யவ்வே ;
அல்கவே இன்ப வரசெவ் விடத்துமே.

வல்லே = சீக்கிரம் — soon.
அல்க = தங்க = abide.

The Gracious Teacher comes soon to the world ;
May good thoughts and love grow beneficially in the hearts of all people;
May all possible action be good;
May the mischievous violence vanish,
May the Kingdom of Happiness abide everywhere.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை,
சிந்துபூந்துறை.

# பத்திராதிபர் குறிப்புகள்.

பிப்ரவரி மீ 17உ யானது பிரம்மஞான ஸபையாருக்கு ஓர் சிறந்த புண்ய தினம். 1907-ம் வருஷம் பிப்ரவரி மீ 17 உ ஸ்ரீமான் கர்னல் ஹென்றி ஸ்டீல் ஆல்காட் என்னும் பெருமான் தன் ஸ்தூல சரீரத்தைவிட்டு வெளியேகினர். இப்புண்யசீலர், 1875-ம் வருஷம் நவம்பர் மீ 17 உ மாதா ஸ்ரீ ஹெலிநாம்பாள் அம்மையாருடன் பிரம்மவித்யா மஹாஸபையை ஸ்தாபித்தவர். அதுமுதல் தன் மரணபரியந்தம் இம்மஹாஸபையின் தலைவராயிருந்து இணையற்ற ஸாமர்த்தியத்துடனும் தளராத உற்சாகத்துடனும், இவ்வுலகமெங்கும் பரவி பிரஸித்திவாய்ந்த இச்சபையை உருவாக்கினர். ஸபையின் ஆரம்பகாலங்களிற் செய்யப்பட்ட இந்த தீரபுருஷரின் அரிய பெரிய உழைப்பினாலேயே ஸபைக்கு நல்ல உறுதியான அஸ்திவாரம் ஏற்பட்டுவிட்டது. பின்னால் உழைப்பவர்களுக்கு வழியை சுலபப்படுத்தியவர் இவரேயாவர். இவர் மாசற்ற மனத்தினர். அஞ்சாத நெஞ்சம்படைத்த வீர்யவான். குணமென்னும் குன்றேறி நின்ற ஸத்குண ஸம்பன்னர். தன் கடமையை நிறைவேற்றும் விஷயத்தில் மஹா உறுதி படைத்தவர். இத்தகைய க்ஷத்திரிய வீர்யம் வாய்க்கப்பெற்ற இந்த யுத்தவீரனே ஆரம்பகாலத்தில் நமது மஹா ஸபைக்கு வேண்டியிருந்ததுபோலும். இப்பெரியாரின் ஞாபகார்த்தமாக இந்தப் புண்ய தினத்தை பிரம்மஞானக் கிளைச்சங்கங்கள் உள்ள இடங்களிலெல்லாம் விசேஷ உற்சாகத்துடன் கொண்டாடுவார்கள்.

... ... ... ... ...

இதே தினத்தில், அதாவது, 1847-ம் வருஷம் பிப்ரவரி மீ 17உயில் ஸ்ரீமான் C. W. லெட்பீட்டர் என்னும் ஞான சிரேஷ்டர் இப்புவியில் அவதரித்தனர். இவர் ஞான சாஸ்திரங்களைக் கரைகண்டவர். இதுவரையில் எத்தனையோ ஞான நூல்களை வெளியிட்டிருக்கின்றனர். குப்த சாஸ்திரத்தில் நுண்ணிய ரஹஸ்யமான தத்துவங்களை யாவருக்கும் புலப்படும்படியாய்த் தெளிவாய் சொல்ல வல்லவர். இவர் திவ்ய திருஷ்டிபெற்ற சிறந்த அநுபவியாதலால் இவர் சொல்லும் வார்த்தைகளெல்லாம் ஸ்வாநுபவத்தில் நேரில் கண்டறிந்த உண்மைகளாகும். எப்பொழுதும் ஸந்துஷ்டியுள்ளவர். இவரது மனச்சாந்தியையும் ஸந்தோஷத்தையும் மாற்றவல்ல சக்தி இவ்வுலகில் எதற்குமில்லையென்றே சொல்லத்தகும். இவரது நூல்களாலும் உபதேசங்களாலும் சிறந்த அநுஷ்டானங்களாலும் ஆயிரக்கணக்கான பேர்கள் மேன் மார்க்கத்தில் பிரவேசித்திருக்கின்றனர். இப் பேரறிவாளர், சென்ற டிஸம்பர் மீ த்தில் ஸ்ரீகாசிக்ஷேத்திரத்தில் நடைபெற்ற பிரம்மவித்யா மஹா ஸபையின் வருஷோத்ஸவத்திற்கு விஜயம் செய்து, அங்கிருந்து அடையார்வந்தடைந்து, சென்ற ஜனவரி மீ 27உ ஆஸ்ட்ரே



லியாவுக்குச் சென்றனர். அங்கு அபாரமான கைங்கரியம் புரிந்து வருகின்றனர். இப்பெரியாரின் ஞாபகார்த்தமாகவும் பிரம்மஞானக் கிளைச்சபைகளிலெல்லாம் பரம பக்தி சிரத்தையுடன் இந்த ஸுதினத்தைக் கொண்டாடுவார்கள். இவரது முக்கிய பரஞான போதாமிருதத்தின் ஒரு சிறுபாகத்தை நம் நேயர்கள் பருகவேண்டி, இச்சஞ்சிகையில் "இறந்தவர்களை நாம் இழந்துவிடவில்லை" என்னும் விஷயத்தை சேர்த்திருக்கிறோம். அதை நம் அபிமானிகளனைவரும் படித்துத் தெளிந்துகொள்வார்களென்று நம்புகிறோம்.

இதே தினத்தை அடையார் தினம் என்று இவ்வுலகில் பிரம்மஞான ஸபைகளுள்ள விடங்களில் வைத்துக்கொண்டு, மெம்பர்கள் அடையாற்றில் நடக்கும் காரியங்களுக்கென்று தங்கள் தங்களாலியன்ற பொருள்களைச் சேர்த்து அனுப்பிவருகிறார்கள்.

... ... ... ... ...

பாரத ஸமாஜ நித்திய பூஜையைப் பற்றி சென்ற சஞ்சிகைகளில் நாம் வரைந்திருப்பதால் அதைப்பற்றிய பத்திராதிபர் குறிப்பொன்றையும் திவ்யஞான தீபிகையிலிருந்து மொழி பெயர்த்து வெளியிடல் அவசியமாகுமெனக் கருதி அதை இதனடியில் சேர்க்கின்றோம்:—

அடையார் இந்து தேவாலயத்தில் நிகழ்ந்துவரும் பூஜையைக் குறித்து சில ஆஸ்திகர்கள் மிகவும் விசாரப்படுகின்றார்கள். விசாரமென்னும் பதத்திற்குள்ள பல அர்த்தங்களில் ஒன்று, ஒரு விஷயத்தின் யுக்தா யுக்தத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற அவாவோடு அதின் விவரங்களைக் குறித்து ஆராய்ச்சி செய்தலாகும். இது ஒரு அர்த்தம். இதல்லாமல் "இந்த மனிதன் இவ்விதம் கெட்டுப்போகிறானே" என வியாகூலப்படுதல் மற்றொரு அர்த்தம். அவ்வித வியாகூலத்தைக் குறித்து சென்ற சஞ்சிகையில் "தேவதாராதனை, பகவதாராதனை" என்னும் தலைப்பின் கீழ் வரையப்பட்டது.

இம்மாத சஞ்சிகையில் முதல் அர்த்தத்தைக் குறித்து எழுதப்பட்டிருக்கின்றது. இப்பூஜா விதியில் 'திக்கு பந்தம்' 'திக்கு விமோகம்' என்னும் கிரியைகள் நிகழ்கின்றன. இப் பூஜையில் மாத்திரமேயல்லாமல் ஸகல உபாஸனைகளிலும் திக்குபந்தம், திக்கு விமோகம் என்பவைகளுண்டு.

பூஜை ஆரம்பத்தில் '[illegible]' என்னும் மந்திரம் ஜபித்ததால் விரட்டி அடிக்கப்பட்ட துஷ்ட சேதனங்கள் தூரத்தில் செல்லாமலிருக்கக் கூடும். அல்லது பூஜையின் மத்தியில் துர்சேஷ்டைகள் செய்வதற்காக மீளவும் அவைகள் நெருங்கலாம். அவைகளை நிராகரிப்பதற்காக திக்குபந்தமென்னும் ரக்ஷை

அல்லது கவசத்தை பூஜை செய்பவர்கள் ஸ்தாபித்துக் கொண்டு பூஜையைத் துவக்குவார்கள். இந்த பந்தமென்பது ஒரு கோளாகாரமாகி மனுமையப் பிரகிருதியோடு கட்டப்பட்டு பூஜை செய்பவர்கள் எல்லோரையும் சூழ்ந்து கவர்ந்துகொண்டிருக்கும். கவர்தலெனின், கிழக்கு முதல் அஷ்டதிக்குகளிலும், மேல்பாகம் கீழ்பாகம் முதலிய ஸகல பிரதேசங்களிலும் கோழி முட்டையைப்போல் கோளாகாரமாய் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஆவரணம். இந்த ஆவரணத்தின் மத்தியில் பூஜைசெய்பவர்களும் பூஜை செய்யப்படும் விக்கிரஹாதிகளும் நின்று துஷ்ட சேதனங்களின் ஸ்பர்சத்திற்கு எட்டாமலிருப்பார்கள்.

திக்குபந்தம் செய்துகொண்டு பூஜைசெய்பவர்களின் சலன பரம்பரை இந்த கோளாகாரப் பிரதேசமெங்கும் நிறைந்து வியாபித்து "தேஜோஹிஃ ஷுவ ஷய ஜமஷுத்ரம்" என்றபடி தேஜோரூபமா யிருக்கும்.

யார் பூஜைசெய்யினும் லோகோபகாரார்த்தமே யாவதால் பூஜை முடியவே பூஜை செய்பவர்கள் தாங்கள் தங்கள் ஸத்கார்யத்தாலே சம்பாதித்த பூஜாபலன் என்னும் மஹா ஆசீர்வசனத்தை உலகமெல்லாம் நிரப்புவதற்காக "திக்கு விமோக:" எனச்சொல்லி, முன்னர் தாங்கள் அமைத்த கவசத்தை எடுத்து விடுவார்கள். எடுத்துவிடவே அணைக்கட்டுக்கட்டி உடைத்து விடப்பட்ட நதி ஜலம் அணைக்கட்டை உடைத்துவிடவே படாபஞ்சமாக தச திக்குகளிலும் வியாபிக்கும் தன்மைபோல் பூஜாகாலத்தில் பூஜை செய்தவர்கள் ஸம்பாதித்த மஹத்தான அனுக்கிரஹம் உலகோரெல்லோருக்கும் லபிக்கும். அவ்வித அனுக்கிரஹம் பூ, புவர், சுவர் லோகமென்னும் திரிலோகிகளுக்கும் லபிக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு "பூர் புவர் ஸுவரோ மிதி திக்கு விமோக:" என்னும் மந்திரத்தால் திக்கு விமோகம் செய்யப்படும். ஒவ்வொருவரும் லோகோபகாரார்த்தமாய்ப் பரமேசுவரப் பிரீதிக்காகவே பூஜைகள் செய்யவேண்டுமென தாத்பரியம்.

... ... ... ... ...

சென்ற சஞ்சிகையில் ஸ்ரீ காசியில் நடைபெற்ற பிரம்மவித்யா மஹா ஸபையின் வருஷோத்ஸவத்தைப் பற்றிய சில குறிப்புகளை வரைந்திருந்தோம். அதன் விவரங்களில் இன்னும் சிலவற்றை அடியிற் கூறுகிறோம்:—

இக்கூட்டத்திற்கு 800 பெயர்கள் ஸபையார்கள் வந்திருந்தார்கள். காசிப் பட்டணத்தில் நிகழ்ந்த வருஷக்கூட்டம் எல்லாவற்றையும் விட இவ்வருடத்திய சங்கியை அதிகம். எல்லா வசதிகளும் மிக்க சிரத்தையோடும் ஜாக்ருகத்துடனும் ஏற்படுத்தப்பட்டிருந்தன.



25உ மத்தியானம் பிரம்மஸ்ரீ ஸி. ஜினராஜதாஸரவர்கள் பிரஸிடெண்டு அவர்கள் சார்பாய் வருஷோபன்யாசத்தை யளித்தார்கள். அதில் சில முக்கியாம்சங்களைப் படிப்பவர்களுக்காக இங்கு கீழ் வரைகின்றோம்.

ஸமாஜம் ஆரம்பித்தது முதல் இப்பால் 51 வருஷங்களில் வருஷோத்ஸவ காலத்தில் பிரசிடெண்டு அவர்கள் தேசாந்தரங்களில் இருக்கும்படி இரண்டு தடவைகளே நேர்ந்தன. 1889ம் வருஷத்தில் அப்போதைய பிரஸிடெண்டு கர்னல் ஆல்காட்டு துரையவர்கள் அமெரிக்காவினின்று வரமுடியாமல் போனமை பற்றி, அவ்வருஷம் கன்வென்ஷனே நடக்கவில்லை. இரண்டாவது இந்த 51ம் ஷஷ்டித்திய கன்வென்ஷன். இவ்வருஷம் அம்மாளவர்கள் வராமல்போயினும், அம்மாளவர்கள் பிரத்யக்ஷமா யிருப்பதாகவே, நிகரற்ற உத்ஸாஹத்தோடு, சபைகள் நடந்தேறின.

சென்ற வருஷத்தில் எல்லா தேசங்களிலும் சேர்ந்து ஸபையார்களின் சங்கியை 48650. இவ்வருஷத்தில் புதிதாய்ச் சேர்ந்தவர்களின் சங்கியை 6000; இறந்தவர்கள், விட்டு நீங்கியவர்கள், காலத்தில் வருஷக் கட்டணத்தைச் செலுத்தாமல் நீக்கப்பட்டவர்களின் சங்கியைபோக முதல் வருஷ இறுதியைவிட, இந்த கடந்த வருஷ முடிவில் ஸபை மெம்பர்களின் சங்கியை 1900 பெயர்கள் ஜாஸ்தி.

நமது தேசத்தில் சென்ற வருஷம் சேர்ந்த புதிய அங்கத்தினர்களின் சங்கியை 690. மெம்பர்களின் சங்கியையைக் கூட்டிப் பார்க்க அமெரிக்கன் ஸெக்ஷன் முதலாவது. அதில் 7517 மெம்பர்கள் இருக்கிறார்கள்.

அடையார் தினத்தில் (பீப்ரவரி 17உ) அந்த தேசத்தில் ரூ 15050 வசூலிக்கப்பட்டு அடையாருக்கு ரவானை செய்யப்பட்டது. இதுவுமன்றி ஒரு மெம்பரின் மரண உயில்படி ரூ 17000 ஸபையின் மூலஸ்தானத்திற்குக் கிடைத்தன. இங்கிலாந்து, ஆஸ்டிரேலியா, ஸ்வீடன், ஹாலண்டு, ருஷியா, தென் ஆப்ரிக்கா, ஸ்விட்ஸர்லாண்டு, ஜாவா முதலிய 44 தேசங்களின் ரிப்போர்ட்டுகள் படிக்கப்பட்டன. அபார வேலைகள் நடப்பதாய்த் தெரிய வருகிறது. "ஸ்ரீமத் பகவத் கீதை" போர்ச்சுகல் பாஷையில் வெளிப்படுத்தப்பட்டது.

ஸபை எங்கும் அபிவிர்த்தியாகிக் கொண்டே வருகின்றது. மெம்பர்களெல்லோரும் ஸபையின் அபிவிருத்தி விருத்தாந்தத்தை வெளியிடுதல் நன்றாகும். வருஷாந்தர ரிப்போர்ட்டு கிளைச்சபைகளுக்குக் கிட்டியவுடன் ஒவ்வொரு கிளைச்சபையிலும் அதை சாங்கோபாங்கமாய்ப் படித்தல் மிகவும் நன்று.

# *இறந்தவர்களை
# நாம் இழந்துவிடவில்லை.

இறந்தவர்கள் உங்கள் ஸ்தூலதிருஷ்டியைவிட்டுச் செல்லும் பொழுது நீங்கள் அவர்களை இழந்து விட வில்லையென்று எங்களுக்கு சாத்தியமாயுள்ள முழு பலத்தோடும் உங்களுக்குச் சொல்கிறோம். அவர்கள் விலகவில்லை. அவர்கள் இன்னும் உங்கள் அண்டையிலேயே இருக்கிறார்கள். அப்படி இருக்கிறார்களென நாங்கள் உங்களுக்கு குருட்டு நம்பிக்கையினாலாவது அல்லது அதை சிரத்தையோடு ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற நோக்கத்துடனாவது சொல்வதன்று. அது விஷயத்தில் எங்களது சொந்த அனுபவத்தின் பலனாகவே சொல்கிறோம். எங்களில் அனேகருக்கு மரணத்தின் ஸ்திதி நன்றாய்த் தெரியும். ஏனெனில், மரணத்தின் ஸ்திதியைப் பார்க்கக்கூடிய சக்தியைப் பக்குவம் செய்துகொள்வதற்காக அனேக வருஷங்களாய் நீங்கள் நினைக்கக்கூடாத அளவு பலமாய் உழைத்திருக்கிறோம். ஆகையால், அவைகளைப் பற்றி நாங்கள் உங்களுக்கு எடுத்துரைக்கக்கூடும். ஆனதுபற்றி, சில பெரிய அம்சங்களைப்பற்றி பிரத்யக்ஷமான ஸ்வய அத்தாக்ஷியை உங்களுக்கு நாங்கள் கொடுக்கக்கூடும். இந்த அம்சங்களில் பெரிதாயுள்ளது, நீங்கள் இறந்தார்களெனச் சொல்லும் இவர்கள் குறைந்த ஜீவ்ய முடையவர்களல்லவென்றும், ஆனால் உங்களைவிட விசேஷ ஜீவ்ய முடையவர்களென்றும் சொல்வதாகும். அதற்குக் காரணம், எல்லா சரீரங்களையும் விட தடித்ததும் பளுவானதுமாயுள்ள ஸ்தூலவுடலை விட்டதுவேயாகும். அவர்கள், வேதத்தில் சொல்லி யிருக்கிறபடி தங்கள்பேரில் பளுவாய் ஏறியுள்ள மாம்ச உடையாயுள்ள இம்மரண சரீரத்தைக் களைந்தெறிந்தபடியால் இப்பொழுது விசேஷ ஆனந்தத்தை அனுபவிக்கக் கூடியதாய் விசேஷ ஜீவ்ய முடையவர்களாயும் வியவகாரமுள்ளவர்களா

* இஃது லிபரல் காதோலிக் சர்ச்சு பிஷப்புகளின் அத்யக்ஷரான ஸ்ரீமான். C. W. லெட்பீட்டர் அவர்களால் கூறப்பட்ட விஷயம். பாரததர்மம் எனும் பத்திரிகையிலிருந்து பத்திராதிபால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.



யும் இருக்கிறார்கள். அழுகிறவர்களே, ஆறுதலுடனிருங்கள். இனி அழவேண்டாம். பூமியில் உங்களுக்கு நெருங்கியுள்ளவர்களை நீங்கள் இழக்கும்பொழுது, உலகம் உங்களுக்கு எவ்விதம் பாழ்த்ததுபோல் தோன்றுமென்பதை நான் நன்கறிவேன். நான் நீங்கள் ஓலமிட்டழுதல் ஸ்வலாப நோக்கமுள்ளதென்று சொல்லும்பொழுது எனக்கு அனுதாபக் குறைவுயென்று நினையாதீர்கள். ஏனெனில், நீங்கள் அழும்பொழுது உங்களையே நீங்கள் நினைக்கின்றீர்கள். அதை விட்டு, உங்களைவிட்டுப் பிரிந்தவர்களையும், அவர்களுடைய விசேஷ மஹிமை பொருந்திய லாபத்தையும் சிந்தியுங்கள். ஒரு நிமிஷமேனும் அழாதேயுங்கள். ஆனால், கஷ்டம் துக்கங்களை விட்டும் ஸ்தூல சரீரத்தின் பளுவை விட்டும் கடந்துசென்ற அவர்கள் எவ்வளவு தன்யர்களென்பதைச் சிந்தியுங்கள்.

நீங்கள் அவர்கள் தங்கள் மனோ வேதனையை விட்டுக் கடக்கவில்லையெனச் சொல்லலாம். சிலர் விஷயமாய் அவ்வேதனை உண்மையேயாயினும் நாம் வசிக்கும் இந்த ஜீவ்யத்தைவிட அப்பாலுள்ள மேலான ஜீவ்யம் மிகவும் நன்றே. அவ்வித பந்தமும் கஷ்டமும் நேரும்படி செய்துகொண்டதற்கு அவர்களுடைய செய்கைகளே காரணம். அவ்வித பந்தத்தாலே தங்களுக்கு நேர்ந்த கஷ்டம் ஏன் வந்ததென்பதைப் பார்க்கவும், அதை எவ்விதம் மேல் நோக்கத்துடன் சகிப்பதால் அதை அதிக்கிரமித்துச்சென்று மரணத்திற்கப்பால் மேலான ஸ்திதியை 'ஏற்படுத்திக்கொள்ளலாமென்பதைப் பார்க்கவும் சக்தியுடையவர்களாகிறார்கள்.

ஆகையால், பூமியிலுள்ள கஷ்டத்தோடு ஒப்பிடும்பொழுது மேல்லோகங்களில் கஷ்டமேயில்லை. ஸ்தூல சரீரத்தை விட்டவர்கள் எல்லாவற்றினிடத்தும் அந்தர்யாமியாயுள்ள பெரிய ஸத்தியத்திற்கு நெருங்கியிருக்கிறார்கள். ஆகையினாலே அவர்கள் சென்றுள்ள இடத்தை நாம் பார்க்கக்கூடியதாய் நமது இந்திரியங்களை நாம் பக்குவப்படுத்திக்கொள்ளும்வரையில் நாம் பார்ப்பதையும் அறிவதையும் விட அவர்கள் விசேஷமாய்ப் பார்த்து அறிகிறார்கள். அவ்விதம் பக்குவம் செய்யக்கூடும். அது ஒருதடவை மாத்திரமன்று. நூற்றுக்கணக்கான தடவைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகையால் இறந்தவர்களுடைய நிலைமையைப்பற்றி அபார அளவு அத்தாக்ஷியிருக்கின்றது. சில செய்கைகள் மரணத்திற்கப்பாலுள்ள லோகத்தில் சில ஸ்திதிகளை உண்டாக்குவிக்கும்.

அவைகளையெல்லாம் பல கிரந்தங்களில் நான் எழுதி இருக்கின்றேன். ஆனால், இறந்தவர்கள் ஜீவித்திருப்பவர்களைவிட மேலான லோகத்தில் மேலான படியில் நிற்கின்றார்களென்னும் விஷயத்தை உங்களுக்குப் பதியச் செய்யவேண்டுமென்பது என் விருப்பம். ஸ்தூல சரீரத்தை விட்ட ஒருவன் பெரிய ஞானி அல்லது பக்தனாவதில்லை. அவன் இறப்பதற்கு முன்னர் எந்த ஸ்திதியிலிருந்தானோ, பின்னரும் அதே ஸ்திதியில் தான் இருக்கிறான். ஆனால் அவன் தனது சக்திகளைப் பக்குவப்படுத்திக்கொள்ளும் ஹேதுக்களிருக்கின்றன. தங்களுக்கு வாய்த்த சந்தர்ப்பங்களை உபயோகப்படுத்திக்கொள்ளாதவர்களு மிருக்கிறார்கள்; ஆனாலோ, சீக்கிரமாய்க் கற்றுக்கொள்கிறவர்களும், துரிதமாய் மேற்படிகளுக்குச் செல்பவர்களும் இருக்கின்றார்கள். அவர்கள் உங்களைவிட்டு தூரத்தில் செல்லவில்லை. துக்கம் பாபம் என்ற மேகத்தினின்று தூரத்தில் செல்கிறார்கள்.

ஆகையால் சென்றவர்களைக் குறித்து நீங்கள் சிந்திக்கும்பொழுது உங்கள் மனதில் மேலான ஐயமிருக்கட்டும். எவ்விதமவர்களுக்கு பூலோகசோதனைகளும் இடர்களும் ஒழிந்தனவென்பதைச் சிந்தியுங்கள். அவர்களுக்கு வாய்த்த சந்தர்ப்பங்களைச் சிந்தியுங்கள். நீங்கள் அவர்களுக்கு உங்களது அன்பான நினைவுகளைச் செலுத்தும்பொழுது, அவர்கள் மென்மேலும் செல்லவேண்டுமென்றும், அவர்கள் அதிவிரைவில் அபிவிருத்தியடையவேண்டுமென்றும், உண்மையான விருப்பத்தோடு செலுத்த மிகவும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். நீங்கள் உங்களைப்பற்றிச் சிந்தியாதீர்கள். அவர்களைப்பற்றியே சிந்தியுங்கள். அவர்களுக்கு எதிரில் என்ன இருக்கின்றதென்பதைச் சிந்தியுங்கள். அவ்விதம் செய்யின், உங்களுக்கு துக்கமிருக்கினும் சுகமாயிருப்பீர்கள். துக்கமுண்டாவது ஸகஜமாயினும் அது உண்மையில் ஸ்வலாபத்தைக் கருதியதே. அவ்வித துக்கத்தினின்றும் கடந்து அவர்களுக்கு நேர்ந்த மஹிமையை நினைத்து ஸ்வயநயமற்ற ஆனந்தத்தில் ஆழ்ந்திருங்கள்.

---

# * நான்.

“நான்” எனும் சப்தம் எங்கும் பழக்கத்தில் இருக்கின்றதானாலும், தத்வ விசாரணையால் நிர்ணயஞ் செய்யப்படவேண்டிய இதனுடைய உண்மையான கருத்தை ஸாமான்ய ஜனங்கள் அறியமாட்டார்கள். “நான்” என்பது பாமர ஜனங்களுக்கு வெளிப்படையாயுள்ள தேஹ இந்திரியங்களோடு கூடின இந்த ஸ்தூல சரீரமென்றே தோன்றிக்கொண்டிருக்கும். ஆனால் இவ்விரண்டிற்கும், தங்கத்திற்கும் ஈயத்திற்கும் எவ்வளவு தாரதம்யமுளதோ அவ்வளவு தாரதம்யமுண்டு. நமது சரீரத்தில் ஈசுவராம்சமாயுள்ள ஜீவாத்மா இருக்கின்றது. ஸ்வயம்பிரகாசமாயுள்ள இந்த ஜீவாத்மாவைச் சுற்றி மூடிக்கொண்டிருக்கும் பஞ்சகோசங்கள் உள. அன்னமய, பிராணமய, மனோமய, விக்ஞானமய, ஆனந்தமய, கோசங்களென இந்த ஐந்து கோசங்களுக்கும் பெயர்கள். ஆத்மாவின் தர்மங்கள் வேறாகவும், இப்பஞ்சகோசங்களின் தர்மங்கள் வேறாகவும் இருக்கினும், இவைகளுக்குள்ள அத்யந்த தாரதம்யங்களாலும், நமக்குள்ள அக்ஞானத்தாலும், பஞ்சகோசங்களின் தர்மங்களை ஆன்மாவிடமும் ஆன்ம தர்மங்களை பஞ்சகோசங்களிடத்தும் ஆரோபித்துவருகிறோம். இப்பஞ்சகோசங்களின் தர்மங்களை நன்றாய்க் குறிப்பிட்டறிந்து, இப்பஞ்சகோசங்கள் “நான்” அல்லவென்றும், இவைகளுக்கு அதீதனும் பிரபுவுமான ஆன்மாவே “நான்” என்றும், அறிந்துகொள்ளலே ஆத்மஞானமெனப்படும். பஞ்சகோசங்களின் தர்மங்களை ஆன்மாவிடம் எவ்விதம் ஆரோபிக்கிறோமோ அதைக் கீழே விவரிக்கின்றேன்.

மாம்ஸம், ரக்தம், எலும்புகள் முதலாயுள்ள ஸப்த தாதுக்களால் செய்யப்பட்ட ஸ்தூல சரீரமே அன்னமயகோசம். நான் புருஷன், நான் ஸ்திரீ, எனும் லிங்கபேதங்களும்; நான் வாலிபன், நான் கிழவன் எனும் வயதின் பேதங்களும்; நான் கறுத்தவன் நான் சிவந்தவன் எனும் வர்ணபேதங்களும்; நான் தடித்தேன் நான் இளைத்தேன், நான் ஜனித்தேன் நான் சாவேன் முதலாயுள்ள ஷட்விகாரபேதங்களும்; நான் குட்டையன், நான் நெட்டையன் எனும் ரூபபேதங்களும்— இவை முதலியவைகளெல்லாம் அன்னமயகோசத்தின் தர்மங்களே ஒழிய, நிச்சயமாய் ஆன்மாவிற்கு

* தெலுங்கு திவ்யஞான தீபிகையிலிருந்து பத்திராதிபரால் மொழிபெயர்க்கப்பட்டது.

லிங்கபேதம், வயோபேதம், வர்ணபேதம், ஷட்விகாரங்கள், ரூபபேதம் முதலியவைகள் எவையுமில்லை. ஆனால், அஞ்ஞானத்தால் இந்த அன்னமயகோசத்தின் தர்மங்களை "நான்" எனும் ஆன்மாவினிடம் ஆரோபித்து வருகின்றேன். ஆனால் "என் உடல் கருப்பாயிருக்கிறது." "என் சரீரம் ஸ்தூலமாக விருக்கிறது" முதலாயுள்ள வாக்கியங்களை நாம் பிரயோகிக்கும் பொழுது, "என் புஸ்தகம்," "என் குதிரை" எனச் சொல்வதில் நான் வேறு புஸ்தகம், குதிரை வேறாக இருப்பதுபோல், என் சரீரம் வேறாகவும் நான் வேறாகவும் இருப்பதாக ஸ்புரிக்கின்றதல்லவா?

இந்த அன்னமயகோசமெனும் ஸ்தூல சரீரத்தை ஆச்ரயித்துக்கொண்டு பஞ்சப்பிராணன்களும், ஞானேந்திரிய கோளங்களும் கர்மேந்திரிய கோளங்களுமிருக்கின்றன. ஆனாலும் ஸ்தூல சரீரமெல்லாம் நுழைந்து வியாபித்துக்கொண்டு ஒரு சூக்ஷ்ம கோசமிருக்கிறது. இது பிரதிவீதத்வ சூக்ஷ்ம அம்சங்களால் அமைக்கப்பட்டு, ஸ்தூல சரீரத்திற்கு பிரதி ரூபமாக இருப்பது பற்றியும், அதை எப்பொழுதும் விட்டுப் பிரியாமல் இருக்கும் காரணத்தாலும் அதற்குச் சாயா சரீரமெனப்பெயர். ஸ்தூலசரீரத்தில் நாளத்தில் ரக்தம் பிரவஹிக்கும் மாதிரி இதனிடம் பிராண சக்திபிரவஹித்துக்கொண்டிருக்கும். இக்கோசம் நன்றாய் வேலை செய்து கொண்டிருக்குமளவும் சூர்ய பகவானிடமிருந்து பிரவஹித்துக்கொண்டிருக்கும் பிராண சக்தியை வேண்டிய அளவு கிரஹிப்பதின் துவாரா ஸ்தூலசரீரம் ஆரோக்கிய முள்ளதாயிருக்கும்.

பஞ்ச ஞானேந்திரியங்களும், பஞ்ச கர்மேந்திரியங்களும் வெளிப் பார்வைக்கு ஸ்தூலசரீரத்தினிடமாகக் காணப்படினும், உண்மையாயுள்ள இந்திரிய ஸ்தானங்கள் சூக்ஷ்மசரீரத்தினிடமாக விருக்கின்றன. சூக்ஷ்மசரீரத்தில் இந்திரியங்கள் ஒழுங்காக இருந்தால்தான், கண்கள், செவிகள், இதர இந்திரியங்கள் தம் தம் வேலைகளைச் செய்யும். அவைகள் கெட்டுப்போனால், கண்கள் இருக்குமேயொழிய பார்க்கமாட்டா. காதுகள் கேளா. அந்தந்த இந்திரியங்கள் தம் தம் வேலைகளைச் செய்யமாட்டா.

வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தங்களென்ற பஞ்ச கர்மேந்திரியங்களும், பஞ்ச பிராணவாயுக்களும் சேர்ந்து பிராண



மயகோசமாகும். நான் பசித்திருக்கின்றேன், நான் தாகமெடுத்திருக்கின்றேன், நான் பேசுகின்றேன், நான் நடக்கின்றேன், நான் புருஷன், எனச் சொல்லும்பொழுது, அந்த தர்மங்களெல்லாம் கர்மேந்திரியங்களுடையவும், பிராணபஞ்சகத்தினுடையவும் தர்மங்களாக இருக்கினும் இவைகளை ஆன்மாவினிடம் ஆரோபிக்கின்றேன். ஆனால் நிச்சயமாய் ஆன்மாவிற்கு பசி, தாகம், பேசுதல், நடத்தல், ஆண் தன்மை முதலாயுள்ள தர்மங்கள் இல்லை. ஆனால், "என் வாக்கு தடைப்படுகின்றது", "என் பிராணன்கள் கண்டத்தில் சென்றிருக்கின்றன" முதலாயுள்ள வாக்கியங்களைப் பிரயோகிக்கும்பொழுது, "என் புஸ்தகம்," "என் குதிரை," எனச் சொல்வதுபோலவே, வாக்கு, பிராணன்கள் முதலியவைகள் என்னைவிட பின்னங்களான வஸ்துக்களாகக் குறிப்பிடுகிறோம். ஆகையால் பிராணமயகோசத்தைவிட "நான்" வேறாயிருப்பதாகத் தெளிவாகின்றது.

செவிகள், சர்மங்கள், கண்கள், நாக்கு, மூக்கு என்ற பஞ்ச ஞானேந்திரியங்களும், மனதும் சேர்ந்து மனோமயகோசமெனப்படும். நான் கேட்கின்றேன், நான் தொடுகின்றேன், நான் பார்க்கின்றேன், நான் ருசிபார்க்கின்றேன், நான் முகர்கின்றேன், நான் சங்கற்பிக்கின்றேன், நான் சுகிக்கின்றேன், நான் துக்கிக்கின்றேன், நான் மோஹிக்கின்றேன் எனச் சொல்லும்பொழுது, ஞானேந்திரியங்களுடையவும், மனதினுடையவும் வியாபாரங்களை ஆன்மாவிற்கு ஆரோபிக்கின்றோம். வாஸ்தவத்தில் ஆன்மாவிற்குக் கேட்டல், ஸ்பர்சித்தல், சோகித்தல், மோஹித்தல் முதலிய தர்மங்களில்லை. ஆனால் "என் காது கேட்கவில்லை," "என் கண்களுக்குப் பார்வை குறைந்தது," "என் மனதிற்கு சுகமாயிருக்கிறது," "என் மனதிற்குக் கஷ்டமாக விருக்கிறது", என்று சொல்லும்பொழுது, "என் புஸ்தகம்", "என் குதிரை", என்று சொல்வதுபோலவே, நான்வேறாகவும், என் ஞானேந்திரியங்களும், மனதும் என்னைவிட பின்னங்களாயுள்ள பதார்த்தங்களாகவும் ஸ்புரிக்கின்றன.

மேற்சொன்ன ஞானேந்திரியங்கள் ஐந்தும், புத்தியும் கலந்து விஞ்ஞானமயகோசமாகும். நான் கார்யங்களை நிச்சயிக்கின்றேன், நான் புத்திமான், நான் பண்டிதனெனச் சொல்லும்பொழுது, கார்

யங்களை நிச்சயித்தல், புத்தி கூர்மை, பாண்டித்யம் முதலிய தர்மங்கள் புத்தி இந்திரியத்திற்குச் சேர்ந்தவைகளாயிருக்கினும், ஆன்மாவினிடம் ஆரோபிக்கின்றோம். "என் புத்தி நிச்சலமாயிருக்கின்றது", "என் புத்தியால் இதை நிக்கிரஹம் செய்யக்கடவேன்" எனச் சொல்லும்பொழுது மாத்திரம் நான் வேறாகவும், புத்தி என்னைவிட பின்னமாயுள்ள பதார்த்தமாகவும் ஸ்புரிக்கின்றது.

ஈசுவரதத்வம் சிருஷ்டிக்க நோக்கத்துவக்கிய பொழுது ஈசுவரனுக்கு உபாதியான பிரகிருதிக்கு மாயா சக்தியெனப் பெயர். அது ஈசுவரனுக்கு அதீனம். ஈசுவரன் சிருஷ்டி நோக்கமுடையவனாகி, பஹிர்முகனாகவே, ஈசுவராம்சங்களாயுள்ள ஜீவர்கள் உள்பட பஹிர்முக முடையவர்களாவார்கள். அப்பொழுது அந்தப் பிரகிருதி அம்சங்களாயுள்ள சில அணுபரமாணுக்கள் இந்த ஜீவர்களுக்கு உபாதிகளாகும். அந்த பிரகிருதி, ஜீவர்களுக்கு ஸ்வாதீனமன்று. ஜீவனை ஒட்டிக்கொண்டு அந்த மஹா உன்னதமான லோகத்தில் ஸ்வயசித்தமாயுள்ள பிரகாசத்தை மறைப்பதால், அதற்கு அவித்தையெனப் பெயர். ஆனால் இதுவே காலக்கிரமத்தில், அனேக ஜன்ம பரிபக்குவத்தால், ஜீவனுக்கு ஸ்வாதீனப்பட்டுவந்து, ஆத்மாவின் ஸ்வப்பிரகாசத்தை வெளிப்படுத்தும் உபாதியாகும். அதுவே ஆனந்தமயகோசமாகும். ஜீவயாத்திரையின் துவக்கத்தில் அவித்தை, அஞ்ஞானத்தின்மூலம், அதனுடைய உதவியாலேயே ஜீவனுக்குப் பலவித அனுபவங்களுண்டாக, முடிவில் அதுவே வித்தையாகும்.

ஆன்மாவை அணுகி ஒட்டியிருக்கும் அஞ்ஞானமே ஆனந்தமயகோசமெனப்படும். இதையே காரண சரீரமென்றும் சொல்வார்கள். ஏனெனில் இக்காரண சரீரமே ஜீவனுடைய அனேக ஜன்மங்களுக்குக் காரணமாகி நிற்கும். "இக்காரண சரீரம் பங்கமான பின்னர் புனர் ஜன்மமில்லை, நான் அஞ்ஞானி, நான் அவிவேகி, நான் கர்த்தா, நான் கர்மபந்தமுடையவன்" என்று சொல்லும் பொழுது அஞ்ஞானம், கர்த்திருத்வம், பந்தமுடைமை என்னும் தர்மங்கள், ஆனந்தமய கோசத்திற்கு சேர்ந்தவைகளாகயிருக்கினும் அவைகளை ஆன்மாவினிடம் ஆரோபிக்கின்றோம். உண்மையில் ஆன்மாவிற்கு அஞ்ஞானமாகட்டும், கர்த்திருத்வமாகட்டும், பந்தமுடைமையாகட்டும் இல்லை. "என் அவிவேகம் நசித்தது" என்று சொல்லும்பொழுது, "என் புஸ்தகம் போயிற்று" என்று சொல்வதுபோல், நான் வேறாகவும், ஆனந்தமய கோசதர்மம் என்னைவிட பின்னமாகவும் ஸ்புரிக்கின்றது.



கத்தியை உறை எவ்விதம் மூடிக்கொண்டிருக்குமோ, அதே மாதிரி பஞ்சகோசங்களும் ஆன்மாவை மூடிக்கொண்டிருப்பதால், ஆன்மாவை அறிந்து கொள்ளமாட்டாமல், பஞ்சகோசங்களை ஆன்மாவென அஞ்ஞானத்தால் பிரமித்துக் கொண்டிருப்போம். மேற்கூறியவிதம், பஞ்சகோச தர்மங்களும் ஆன்மாவினிடம் ஆரோபிக்கப்படும்பொழுது, எங்கெந்த தர்மங்கள் எங்கெந்த கோசங்களுக்கு ஸம்பந்தப் பட்டனவோ அவைகளை நினைவிக்குக் கொண்டுவந்து" இந்த தர்மங்கள் என்னுடையதன்று; பல கோசங்களுக்கு ஸம்பந்தப்பட்டவை; நான் சாக்ஷி மாத்திரன்" என இடைவிடாது தன்னை, ப்பஞ்சகோசங்களினின்று பிரித்துக்கொள்ளின், ஆத்மஞானமுண்டாகும். அதாவது அந்தந்தக் கோச சம்பந்தங்களான சுகங்கள் துக்கங்கள் நேரும்பொழுது, அவைகள் சரீரதர்மங்கள், மாறக்கூடியவைகள், வரத்துப்போக்குள்ளவைகள் என அறிந்துகொண்டு, சுகம் லாபம் நேர்ந்தபொழுது விசேஷமாய்க் குதூஹலப்படாமலும், துக்கங்கள் நஷ்டங்கள் பிராப்தமாகும்பொழுது வியசனத்தில் மூழ்கி உட்காராமல், "சுகதுக்கங்கள் காவடிக்கலயங்கள்" எனத்தெரிந்துகொண்டு, மனச்சமாதானத்தோடு எப்பொழுதும் ஸ்வதர்மத்தை நிறைவேற்றிக் கொண்டிருப்பதே நல்லஞானம். மேலும் சரீரநோக்கத்தாலுண்டாகும் நான், என் இனத்தார் எனும் பின்னபாவங்கள், ஆன்ம நோக்கத்தால் அஞ்ஞான காரணங்களென அறிந்து, எல்லோரும் ஜீவாத்மாக்களே, ஈசுவராம்சர்களே, ஒரே தாயின் குழந்தைகளே எனத்தெரிந்துகொண்டு, ராகத்வேஷாதிகளை நீக்கி ஸர்வபூதஸேவையே ஆத்மதர்மமென ஒழுகுதல் உண்மையான ஞானம்.

M. நரஸிம்மன்.

# * தாய்மார்களின் சங்கம்.

## அதை எவ்விதம் நிறைவேற்றல் வேண்டும்?

### தாய்மார்களின் லக்ஷ்யங்கள்.

கொஞ்ச காலமாகப் பிரபஞ்சமெல்லாம் ஸ்திரீகளுடைய நோக்கங்களில் விசேஷ மாறுதல்கள் உண்டாகிவருவதை நாம் பார்க்கலாம். ஸ்திரீகளுக்கு புருஷர்களுடன் சமமாய் உரிமைகள் அளித்தநாள் தொடங்கி எல்லா தேசங்களிலும், ஸ்திரீகள் தாங்கள் கேவலம் மக்களைப்பெறும் யந்திரங்களென்று சாதாரணமாய்க் கொள்ளப்படும் அபிப்ராயத்திற்கு மாறாகப் போராடிக்கொண்டு, தங்கள் ஸ்வதந்திரங்களை நிர்விக்கினமாய் நிறைவேற்றிக்கொள்வதற்கு முயற்சித்துவருகிறார்கள். இப்போராட்டத்துடன், துரதிருஷ்டவசத்தால், தாய்மார்களின் தர்மங்களைக்கூடப் பூரணமாய் ஸ்திரீகள் மறந்துவிடுகிறார்கள். இப்பொழுது ஸ்திரீகள் தாய்மார்களின் தர்மங்களை மனதில் வாங்கி, அவர்கள் மிகப் பிரீதியோடு நிறைவேற்றும்படி செய்வதற்கு நாம் பல வழிகளிலும் பிரயத்தனம் செய்யவேண்டும். எல்லாக்காலங்களிலும் ஸ்திரீகள் தாய்மார்களாகவே இருந்துவருவதால், மானிடஜாதிக்கு விசேஷ நஷ்டத்தைக் கொடுத்தவர்களாய் ஆவார்களென ஒப்புக்கொள்ளவேண்டியதே. பிராசீன ஆசாரங்களை யனுசரித்து, இக்காலத்திலும் ஸ்திரீகளின் விருப்பங்களுக்கு விரோதமாய், அவர்களைத் தாய்மார்களாகச் செய்தல் மிகவும் நிந்தையான விஷயம். இவ்விஷயத்தில், அவர்கள் நிரோதத்தைக் காட்டிவருதல் நியாயமான கார்யமே. பிரதி ஸ்திரீக்கும், இவ்விஷயத்தில் அவள் அனுசரிக்கும் மார்க்கத்திற்குப் பூரண ஸ்வதந்திரமளிக்கவேண்டும். மேலும் இவ்விஷயத்தை ஆலோசிக்கும் ஸமயத்தில், தாய்மார்களைக் குறித்த, நூதன லக்ஷியத்தை நாம் கொஞ்சமட்டில் தெரிந்துகொள்வது அத்யாவசியம்.

“தகப்பன்மார்களைவிடத் தாய்மார்களைக் குறித்து விசேஷமாய் வற்புறுத்திச்சொல்லுதல் எதற்காக?” என்று சிலர் வினவலாம். இவ்விஷயத்தில் உரிமையானது தாய் தந்தையர் மீது ஸமமாய் இருக்கின்றதென்னும் விஷயம் உண்மையே. ஆனாலும் குழந்தை



பிறந்தநாள் தொடங்கி, தாய் தனது மரணபரியந்தம் குழந்தையின் போஷணையில், தகப்பனைவிட விசேஷப்பொறுப்பை வகித்து வருகின்றாள் என்னும் விஷயத்தை மறக்கப்படாது. தாய்மார்களின் கடமை ஒருபெரிய ஸேவை என்றும், விசேஷபாத்தியதையோடு கூடினதென்றும் தெரிந்துகொள்ளவேண்டும். இந்த உரிமைகளில் அனேகமுறைமைகளும் மார்க்கங்களும் பிரபஞ்சத்திலுள்ள ஸ்திரீகள் எல்லோருக்கும் உண்டு. புதிதாகக் குழந்தையைப்பெற்ற ஸ்திரீ மாத்திரமேயல்லாமல் தக்கவயதுவந்த பிராயத்திலுள்ள ஸ்திரீகளும்கூட இவ்விஷயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது. ஸாதாரணமாய் யுவதிகள், 17, 18, வயதோடு தாங்கள் வித்தைகற்கும் தசைமுடிந்ததென நினைப்பார்கள். உண்மையில், எவராயினும் வித்தையை முடித்தல் ஸாத்தியமன்று. தாய் தகப்பன்கள், குழந்தைகளின் போஷணையைக் குறித்துக்கற்றுக் கொள்ளவேண்டிய விஷயங்கள், வித்தையின் முறைமையில் விட்டொழிக்கப்பட்டன. விசேஷ குழந்தைகளுக்குத் தாயாகிய எனக்கு, என் குழந்தைகள் போதிக்கும் விஷயங்களால், வித்தையின் கிரமத்தில், என் தாயார் எனக்கு போதித்தவற்றைவிட, விசேஷசங்கதிகளை கிரஹித்தேனென நான் உறுதியாய்ச் சொல்வேன். இவ்விஷயத்தில் நமது கடமைகளை நாம் நன்றாய்த் தெரிந்துகொள்ளின், காரகசங்கத்தைப் போலொத்த பெரியசங்கங்கள் இவ்விஷயத்தில் ஸ்திரீகளுக்குள்ள தர்மத்தை சரியான வழியில் அனுஷ்டிக்க முயற்சிக்கின், சுவல்பகாலத்திலேயே பிரபஞ்சமெல்லாம், இவ்விஷயத்தின் பக்கம் நோக்கித்திரும்பும்படி சுலபமாய்ப் பிரயத்தனம் செய்யக்கூடுமென்பது எனது துணிவு. பிரபஞ்சஸ்வரூபம், ஸ்திரீகள் செய்யும் முயற்சிகளை யனுசரித்தே இருக்கக்கூடியது. அவர்களே, ஸ்வரூபத்தை நிர்மாணம் செய்யக்கூடியவர்கள். பிரபஞ்சத்திற்குப் பிராணனை ரக்ஷிக்கக் கூடியவர்கள். பிரகிருதி தர்மத்தையொட்டி, இதுவே அவர்களுடைய ஸ்வதர்மம். ஆகையால், ஸ்திரீகளே இவ்விஷயத்தில் முயற்சிக்க முன்வரின், நாம் எதிர்பார்ப்பதற்கு அதிகமாகவே அவர்கள் பிரபஞ்சநோக்கங்களையே ஸம்பூரணமாய் மாறும்படி செய்யக்கூடியவர்களாவார்கள். ஜாதியின் பாவனையெல்லாம், நூதன ஜாதி நிர்மாண விஷயத்தில் லயிக்குமாகில், எவ்வளவு சௌந்தரியமான ஜாதியை சிருஷ்டிக்கக் கூடுமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ! இந்த பாவனை முதலில் தாய்மார்கள் மனங்களிலும், எண்ணங்க

* லேடி எமிலி லட்டியன்ஸ் அவர்களால் ஹெரால்ட் ஆப்தி ஸ்டார் என்னும் பத்திரிகையில் எழுதப்பட்ட வியாஸத்திலிருந்து, பத்திராதிபரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.

ளிலும் ஜனித்து வளரவேண்டும். அப்பொழுதே நாம் விரும்பும் ஜாதி நிர்மாணமாகக் கூடியதாகும். கிறிஸ்து, புத்தர் முதலாயுள்ள மஹான்களை சிருஷ்டிக்கவாவது அல்லது ராக்ஷதர்களை சிருஷ்டிக்கவாவது உள்ள சக்தி, ஒரு பரமகுரு கூறியபடி, பிரபஞ்சத்தில் ஸ்திரீகளைப் பொறுத்தே ஏற்படுகின்றதென சொல்லத்தகும்.

## எம்மாதிரி நிறைவேற்றக்கூடும் ?

இந்நோக்கத்தை மனதில் வைத்துக்கொண்டு, அதைக் காரியரூபத்தில் எவ்விதம் நிறைவேற்றக் கூடுமோ அதைச் சிறிது சிந்தித்துப்பார்ப்போம். அனேக தேசங்களினின்று இங்கு வந்துள்ள நீங்கள், உங்களுங்கள் தேசங்களைச் சென்றடைந்த பின்னர், இந்நோக்கத்தை யேற்றுக்கொள்ளும் சங்கம் யாதேனும் உங்கள் ஸ்தலத்திலிருக்கின், அதில் சேர்ந்து, அதன் மூலமாய் நோக்கத்தை நிர்விக்கினமாய் நிறைவேற்ற முயற்சியுங்கள். நமது தாரக சங்கத்தின் துவாரா வேலை செய்தால் மாத்திரம் போதாது. இந்நோக்கத்தை நமது சபையோர்களுக்கு மட்டுமல்லாமல், எல்லா தேசங்களிலுமுள்ள மற்றவர்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும். அவ்விதம் செய்யின், நமது ஸபையின் மூலமாய் மாத்திரமன்றி, இதரர்கள் ஸ்தாபித்த சங்கங்களின் மூலமாகவும் இந்நோக்கம் வெளியேறுமாகில், இவ்வேலையை அனேக ஜனங்களுக்கு விசேஷமாய்ப் பரவும்படி பிரசாரஞ் செய்யலாம்.

இக் காரிய சாதனத்திற்காக முதல் முதல், இந்த ஜாதீய நோக்கத்தில் அபிமானமுள்ளவர்களைச் சேர்த்து, ஒரு பெரிய மஹாஸபை கூட்டுங்கள். அப்படிப்பட்டவர்கள் அனேகர் இருக்கிறார்கள். அதில் முக்கியமாய், வைத்தியர்களுக்கு இந்நோக்கத்தில் விசேஷ அபிருசியுண்டு. தற்காலம் நமது நாகரீக அபிவிர்த்திக்கு இவ்விஷயமே குறுக்கிட்டிருக்கின்றதென்பதை இவர்கள் நினைக்கிறார்கள். ஆனதுபற்றி அவர்களுடைய ஸஹாயம்பத்தி விசேஷமாய் இருக்கக்கூடியது. சபையைக் கூட்டியபின்னரும் இதைக்குறித்து அதில் எல்லோருக்கும் எடுத்துரைத்த பின்னரும், அவர்கள் அதில் சிரத்தை காட்டியபின்னரும் நமது கடமை முடிந்ததென எண்ணுவதற் கிடமில்லை. நாம் அதற்கப்பால் செய்யவேண்டிய வேலைகளை மூன்றுவிதங்களாகப் பிரிக்கலாம். அதில் முதலாவது வித்யாவிஷயம். இரண்டாவது நிவாரணத்திற்கு ஸம்மந்தப்பட்டது. விக்ஞானத்திற்கு ஸம்மந்தப்பட்டது மூன்றுவது பாகம்.



### வித்யா விஷயம்.

1. வித்யா விஷயத்தில் முதல் முதல், நாம் பிரஜா சமுதாயத்திற்கு, உபன்யாச மூலமாகவும், துண்டுப் பிரசுரங்கள் புஸ்தகங்கள் மூலமாகவும் இவ்விஷயங்களை போதிக்கவேண்டும். தற்காலத்திய ஸ்திதிகளால் உண்டாகும் ஆபத்துக்களைக் குறித்தும், அதில் பிரஜைகளுக்குள்ள கடமைகளைக் குறித்தும் வற்புறுத்திச்சொல்லவேண்டும். இதற்காக தேசமெங்கும் பிரசாரஞ் செய்யவேண்டும். பிரஜைகளின் உதவி முதலியவைகளை இவ்விஷயத்தில் பூரணமாய் அடைவதற்குப் பலவழிகளிலும் பிரயத்தனம் செய்யவேண்டும்.

(இன்னும் வரும்)

எமிலி லட்டியன்ஸ்.

---

# திவ்யஞானசாரம்.

( 187-வது பக்கத் தொடர்ச்சி. )

### த்யாநாநுஷ்டானத்திற்கு நியமங்கள்.

தியானத்திற்குப் பூரணமான பலனைப் பெறவேண்டுமென்றால் சில நியமங்கள் அவசியம். முக்யமாக ஸ்தலமும், காலமும், சேவலம் அவசியம். ஸ்ரீ பகத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ணர் விவரித்திருக்கிறார்:—

" 𑌯𑍋𑌗𑍀 𑌯𑍁𑌞𑍍𑌜𑍀𑌤 𑌸𑌤𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌰𑌹𑌸𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ।
𑌏𑌕𑌾𑌕𑍀 𑌯𑌤𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌨𑌿𑌰𑌾𑌶𑍀𑌰 𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 ॥

𑌶𑍁𑌚𑍌 𑌦𑍇𑌶𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑍍𑌯 𑌸𑍍𑌥𑌿𑌰𑌮𑌾𑌸𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।
𑌨𑌾𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌛𑍍𑌰𑌿𑌤𑌂 𑌨𑌾𑌤𑌿𑌨𑍀𑌚𑌂 𑌚𑍈𑌲𑌾𑌜𑌿𑌨𑌕𑍁𑌶𑍋𑌤𑍍𑌤𑌰𑌂 ॥

𑌤𑌤𑍍𑌰𑍈𑌕𑌾𑌗𑍍𑌰𑌂 𑌮𑌨𑌃 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌯𑌤𑌚𑌿𑌤𑍍𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌕𑍍𑌰𑌿𑌯𑌃 ।
𑌉𑌪𑌵𑌿𑌶𑍍𑌯𑌾𑌸𑌨𑍇 𑌯𑍁𑌞𑍍𑌜𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑍋𑌗𑌮𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌯𑍇 ॥

𑌸𑌮𑌂 𑌕𑌾𑌯𑌶𑌿𑌰𑍋𑌗𑍍𑌰𑍀𑌵𑌂 𑌧𑌾𑌰𑌯𑌨𑍍𑌨𑌚𑌲𑌂 𑌸𑍍𑌥𑌿𑌰𑌂 ।"

(கீதை அத் 6, சு. 10 - 13.)

இதன் அர்த்தத்தைக் கொஞ்சம் விசாரிப்போம்.

## முதன் முதலில் ஸ்தல நியமம்.

"𑌶𑍁𑌚𑍌 𑌦𑍇𑌶𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑍍𑌯 𑌸𑍍𑌥𑌿𑌰𑌮𑌾𑌸𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।

"சுசியான இடத்தில் ஸ்திரமான ஆசனத்தை ஏற்படுத்திக் கொண்டு". சுசியான ப்ரதேசம் என்றால் என்ன? சுப்ரமாக அலம்பிப் பெருக்கி, நிர்மலமான ப்ரதேசமென்றெண்ணிக் கொள்வோமா? அதுமாத்ரமல்ல. நிர்மலமாயும், பவித்ரமாயுமுள்ள இடமென்று அறியவேண்டும். படுக்கை அறை, கச்சேரி சாவடி, சமையல் அறை, இதரமான ஐஹிக கார்யங்களுக்கு உபயோகப் படுத்தும் இடங்கள், அறைகளும், எவ்வளவு அலம்பினாலும், எவ்வளவு அலங்காரம் செய்தாலும், எவ்வளவு நிர்மலமாக இருந்தபோதிலும், அந்த இடங்கள் பவித்ரமானதாகச் சொல்லப்படமாட்டாது. ஸாமான்ய க்ராமங்களுக்கும், பவித்ர க்ஷேத்ர தீர்த்தங்களுக்கும், இருக்கிற தாரதம்யமென்ன? ஸாமான்யமான ஒரு வீட்டிற்கும், தேவாலயத்திற்குமுள்ள தாரதம்யத்தைக் கவனிப்போம். எந்த இடத்தில் ஸதா பக்தர்கள் சேர்ந்து பகவத் விஷயங்களைச் சிந்தித்துக் கொண்டிருப்பார்களோ, பக்தர்கள் கோஷ்டி நடந்துகொண்டிருக்குமோ, அப்படிப்பட்ட ப்ரதேசம் பவித்ரமானது. ஒரு திவ்யக்ஷேத்திரமாகிலும், நதி தீரமாகிலும், தேவாலயமாகிலும், தவறினால் இரண்டாவது பக்ஷம் தன் ஸ்வந்த வீட்டில், பகவதாராதனைக்கு மட்டும் உபயோகப்படுத்தும் அறையாகிலும், சுசியான ப்ரதேசமாம். அவை பவித்ரமானவை. ஆதலால், ப்ரதி வீட்டிலும் பகவதாராதனைக்கும், பகவத் த்யானத்திற்கும் ஒரு அறையை நியமித்து அதை இதர ஐஹிக விஷயங்களுக்கு உபயோகப்படுத்தாமல் வைக்கவேண்டும். அந்த அறை சுப்ரமாகவும் நிர்மலமாகவும் வைக்கத்தகுந்தது. வேண்டுமானாலந்த அறையில் பகவானுடையவும், பக்தர்களுடையவும், ஞானிகள், பூஜ்யர்கள், முதலிய பெரியோர்களுடையவும் படங்களும் விக்ரஹங்களுமிருக்கலாம். பூஜைக்கு வேண்டிய புஷ்பம் முதலானதுகளுமிருக்கலாம். அவ்வறையில் பகவானை ஞாபகப்படுத்தும் வஸ்து தவிர மற்றொன்றும் இருக்கக்கூடாது. அப்படிப்பட்ட இடம் பகவத் த்யானத்திற்குத் தகுந்த இடம். இப்படிப்பட்ட இடம் பகவத் த்யானானுஷ்டானத்துடன் கூடினால் பாஹ்யாப்யந்தர் (வெளியிலும் உள்ளிலும்) சுசியுள்ளதாகும். அப்படி இல்லாமல் ஐஹிக விஷயங்களுக்கு உபயோகப்படும் இடத்தில் தியானம் நிலையாக அமருவது கஷ்டம். மனச்சாஞ்சல்யத்தை அதிகரிப்பதற்குக் காரணமாகும்.



## ஆஸனம்.

தியானத்திற்கு உட்காரும்போது ஸுகமானதும், ஸ்திரமானதுமான ஆஸனமிருக்கவேண்டும். ஆஸனம் கடினமாக இருந்தாலும், பூச்சிபொட்டுகள், எறும்புகள், முதலானவை ஓடும் இடமாக இருந்தாலும், ஈரத்தரையாக இருந்தாலும், சரீரத்திற்குப் பாதை உண்டாகுமாதலால் மனஸ்ஸு ஏகாக்ரமாக (ஒரே முகமாக) இருப்பது கஷ்டம். ஆகையால்:— "𑌸𑍍𑌥𑌿𑌰𑌮𑌾𑌸𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 । 𑌨𑌾𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌛𑍍𑌰𑌿𑌤𑌂 𑌨𑌾𑌤𑌿𑌨𑍀𑌚𑌂 𑌚𑍈𑌲𑌾𑌜𑌿𑌨𑌕𑍁𑌶𑍋𑌤𑍍𑌤𑌰𑌂" என்று நிரூபணம் செய்திருக்கிறார். ஆஸனம் ஸ்திரமாகவும், அசைவு கொடாததாகவுமிருக்கவேண்டும். நிரம்ப உயரமாகயிருக்கக் கூடாது. நிரம்பவும் மட்டமாகவும் இருக்கக்கூடாது. நிரம்ப உயரமாக இருந்தால் உட்காருகிறவர்களுக்குப் பயமுண்டாகுவதற்குக் காரணமாகும், நிரம்பவும் கடினமாகவுமிருக்கக்கூடாது. ஆகையால் வஸ்திரம் (அல்லது சித்ராஸனம்) அதன் கீழ் கிருஷ்ணாஜினம், அதன் கீழ் தர்பாஸனம் இருக்கவேண்டுமென்று நிரூபித்திருக்கிறார். முக்கியமான அபிப்ராயம், ஆஸனம் ஸுகமாக இருக்கவேண்டும். ஸுகமாக இல்லாவிட்டால் மனஸ்ஸு ஸ்திரமாகயிருக்கமாட்டாது. ஆனால், ஸுகமான ஆஸனத்தின்மேல் உட்கார்ந்து மனஸ்ஸு ஏகாக்ரத்தியானத்திற்குப் பதிலாகத் தூங்குவோமோ என்ற பயமுண்டல்லவா! அப்படி ஆகாதிருப்பதற்கு "𑌸𑌮𑌂 𑌕𑌾𑌯𑌶𑌿𑌰𑍋𑌗𑍍𑌰𑍀𑌵𑌂" என்றால் சரீரமும், கழுத்தும், சிரஸ்ஸும், நேராக இருக்கவேணுமென்று போதித்திருக்கிறார். அப்படியில்லாமல் சுவரின் பக்கத்தில் உட்கார்ந்து, சார்ந்துகொள்ள ஸுகமான மணையை சுவரின்மேல் சாத்தி, சார்ந்துகொண்டு உட்

கார்ந்தால் தப்பாமல் ஸாக்ஷாத்ஸித்திதான் பலன்:—"ஏகாந்தே ஸுகமாஸீநஃ" (என்று ஸ்ரீபாகவதம்). அப்படிப்பட்ட பவித்ரமான இடத்தில் ஸுகமாக உட்கார்ந்தவனும் ஜாக்ரதையுள்ளவனுகவும் த்யானம் செய்யவேண்டும். "தத்ரைகாக்ரம் மநஃ க்ருத்வா யதசித்தேந்த்ரியக்ரியஃ." த்யானம் செய்வதற்கு, மனதை ஒருமுகமாகச் செய்து பகவான்மேல் வைக்கவேண்டுமென்ருல், இதர எண்ணங்கள் மனதில் ப்ரவேசிக்க விடாமல் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இந்த்ரியங்கள் கூட வேலைசெய்யாமல் நின்றிருக்கவேண்டும் என்ருல், செவி, கண்கள், மூக்கு, முதலான இந்திரியங்கள் அவைகளின் வ்யாபாரங்களில் ப்ரவர்த்திக்காமலிருக்கவேண்டும். இப்படி இந்த்ரியங்களுடன் சேர்ந்து விஷயங்களைச் சிந்திக்காமல், அவைகளினின்றும் திருப்பி மனஸ்ஸை அசைவின்றி நிறுத்துவதைத்தான் யோகசாஸ்திரத்தில் (1) ப்ரத்யாஹாரமென்றும் (2) தாரணமென்றும் சொல்லப்படுகிறது. இப்படி, அங்கங்களை அமைத்துக்கொண்டு மனதைப் பகவான்பேரில் வைத்துத் தியானத்தை அப்யாஸம் செய்யவேண்டும். அப்படிப் பக்தி சிரத்தைகளுடன் செய்துகொண்டு வரவர காலக்கிரமத்தில் ஸ்வபாவம் பரிசுத்தமாகும்.

## கால நியமம்.

தியானத்திற்கு ஒரு நியதமான காலமிருக்கவேண்டும். முன் காட்டிய மனோ தர்மங்களில் மூன்ருவதைக் கவனிக்க வேண்டும். நம்முடைய தினசர்யையில் கால நியமம் ஏற்பாடு செய்துகொண்டு, காலம் தவருமல் வேலையைச் செய்துவந்தால் அப்யாஸ பலத்தினுல், அந்தந்த ஸமயம் வரும்போது அந்தந்த கார்யம் ஞாபகத்திற்கு வந்து அந்தக்கார்யத்தில் புத்திபோய்க்கொண்டிருக்குமென்று முன் கூறினேமல்லவா ? தியானத்திற்கும் கூட அந்த விதமாகக் கால நியமம் ஏற்பாடு செய்துகொண்டால் அந்தச் சமயத்திற்கு மனதும் சரீரமும் தியானத்திற்கு எதிர்பார்த்து நிற்கும். எத்தனை இதர கார்யங்களும், இதர அஸந்தர்ப்பங்களும் இருந்தாலும் புத்தி தியானத்தில் போய்க்கொண்டிருக்கும். ஆனுலெந்தக் காலம் உத்தமமான காலமோ தெரிந்துகொண்டு, அந்தக்காலம் தவருமல் தியானத்திற்கு உட்கார்ந்துகொண்டால் உத்தமமானபலனைத்தரும்.



அந்தக்காலமெது ? ஸூர்யோதயத்துக்கு முந்தின காலம் சிரேஷ்டமென்று அனுபவஞானமுள்ளவர்கள் சொல்லுகிருர்கள். நித்திரைவிட்டு எழுந்தவுடன் தேஹஸம்பந்தமான கிருத்யங்களைத் தீர்த்துக்கொண்டு ஸ்நாநாதிகளையும் முடித்துக்கொண்டு, சுசியாக உடனே தியானம் செய்யயத்தனப்படவேண்டியது. ஸம்ஸார ஸம்பந்தமான கார்யங்களில்மனஸ்ஸை நுழையவிடுவதற்கு முந்தியே பகவத்தியானம் செய்யவேண்டும். ஸூர்யோதயத்திற்கு முந்திய காலம் நிரம்பவும் ப்ரசஸ்தம். அந்தக்காலத்தில் ப்ரபஞ்சம் முழுவதும் நிசப்தமாக இருப்பதால் த்யானத்திற்கு மிகவும் ஸஹாயமாகவிருக்கும். அது மட்டுமல்ல, நித்ரையிலிருந்து எழுந்த காலத்தில், மனஸ்ஸும் இந்த்ரியங்களும், ஸாமான்யமாகச் சலிக்காமலிருக்கும். தூங்கும் காலத்தில் இந்த்ரியங்களெல்லாம் வ்யாபாரமில்லாமலிருந்துகொண்டிருந்தன வல்லவா ? மனதும் கூட அனேகமாய் நிச்சலமாகவே இருந்திருக்கலாம். ஆதலால் தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்டவுடன், மனதும் இந்த்ரியங்களும் ஸ்வபாவத்தாலேயே நிச்சலமாக இருப்பதால், அப்படிப்பட்ட ஸமயம் மனஸ்ஸை ஏகாக்ரமாக ஆக்கித் தியானத்திற்கு ஆரம்பிப்பது ஸுலபம். அப்படிப்பட்ட ஸமயத்தில், பூர்ணமான ஜாக்ரதாவஸ்தையில் மனஸ் இருக்கிறதுபோல் லௌகிக விஷயத்தில் ஓடாமலும் நித்திரையில் இருக்கிறமாதிரி பூர்ண அக்ஞானத்தில் இல்லாமலும் விழித்துக்கொண்டு நிலையாகவிருக்கும். ஆகையால் அப்படிப்பட்ட ஸந்திகாலம் நிஜமான ஸந்த்யா காலம். அப்படிப்பட்ட ஸ்திதியில் செய்யப்படும் ஒழுங்கான த்யானம் தான் (ஸந்த்யாயதே இதி ஸந்த்யா) நிஜமான ஸந்த்யாவந்தனம்.

## ப்ராதஃகால த்யான பலன்.

அப்படிக் கால நியமத்தை ஏற்படுத்திக் கொண்டு த்யானம் செய்தால் ப்ரதிதினமும் ஸரியாக அந்த ஸமயத்தில் தூக்கம் விழிப்பைக் கொடுக்கும். மனஸ்ஸும் த்யானத்திற்குத் தகுந்த ஸ்திதியிலிருக்கும். த்யானம் சீக்ரமாக ஸபலமாகும். இதுவும் தவிர முன் உதாஹரணமாகச் சொன்ன மனோதர்மங்களில் இரண்டாவது தர்மத்தின் ப்ரயோசனத்தைப் பார்ப்போம். ப்ராதஃகாலத்தில், ஏதாவது ஒரு பாவத்தை மனதில் ஊன்றும்படியாக ஸ்திரமாக

த்யானித்தால், அந்த பாவம் மனஸில் நிற்கும். வேறு ஆலோசனைகள் இல்லாமல், ஒழிவாக இருக்கும் காலத்தில் உதயத்தில் த்யானித்த பாவம் ஞாபகத்திற்கு வரும். ஞாபகத்துக்கு வருவதால் நாம் செய்யும் கார்யங்கள் அந்த பாவத்திற்கு அனுகுணமாக இருக்குமல்லவா? ப்ரமாதத்தால் கெடுதலான காரியங்களில் பிரவர்த்திக்கும் அவகாசம் குறையும். ப்ராதஃகாலத்தில் முதன்முதல் பகவத் த்யானம் செய்பவர்களுக்குத் தினமெல்லாம் ஒழிவு இருந்தால், அந்தப் பவித்ரமான எண்ணங்கள் மனதில் நின்று மனது பரிசுத்தமாகும். மனஸ் பரிசுத்தமாக இருந்தால், மனோபாவங்களும், கோரிக்கைகளும், ஸங்கல்பங்களும், பரிசுத்தமாக விருக்கும். அப்படிப்பட்டவன் செய்யும் வெளிக்கார்யங்கள் பரிசுத்தமாகவும், பாபமில்லாதவைகளாகவும் இருக்குமென ஸந்தேஹமில்லை. இப்படி உதய காலத்தில் பகவானை த்யானித்து அவருடைய குணங்களை அனுஸந்தானம் செய்து, மனது சுத்தமாவதால், நாம் செய்யும் கார்யங்களெல்லாம் சுத்தமாகும். அப்படிப் பட்டவனுடைய நடவடிக்கை பவித்ரமாக இராமல் போகாது.

## ஆத்ம பரிசோதனம்.

இப்படி ப்ராதஃ காலத்தில் உத்தம தர்மங்களையும் எண்ணங்களையும் த்யானித்துக்கொண்டு அவைகளுக்கு அனுகுணமாக தினசர்யையை, பரிசுத்தப்படுத்துவதற்கு நாம் யத்தனம் செய்வோமல்லவா? எவ்வளவு ப்ரயத்தனம் செய்தாலும் லௌகிக வ்ருத்தியில் ப்ரவர்த்திக்கும் பொழுது, பூர்வ கர்ம வாஸனை பலத்தினாலும் அஞ்ஞானத்தாலும் பிசகுகள் நேரிடலாம். அந்தந்தக் காலத்திய ஸங்கர்ப்பங்களைக் கொண்டு, காமக்ரோத லோபங்கள் பூர்த்தியாக ஜயிக்கப்படாம லிருப்பதாலும்கூட நாம் செய்யும் பிரயத்னம் நிறைவேறுமல் போகலாம்.

இந்த்ரியாணாம் ஹி சரதாம் யந்மநோऽநுவிதீயதே ।
தத³ஸ்ய ஹரதி ப்ரஜ்ஞாம் வாயுர்நாவமிவாம்ப⁴ஸி ॥

யததோ ஹ்யபி கௌந்தேய புருஷஸ்ய விபஶ்சித: ।
இந்த்ரியாணி ப்ரமாதீநி ஹரந்தி ப்ரஸப⁴ம் மந: ॥

(கீதை அ 2, சு 67-60.)



ஆதலால் ஒவ்வொருவனும் தினமொரு தரம் தன்னுடைய தினசர்யையை நிஷ்பக்ஷபாத புத்தியுடன், பரிசீலித்து அதனிடத்திலுள்ள குணதோஷங்களையறிந்து, தோஷங்களிருந்தால் அப்படிப்பட்ட தோஷங்களை போக்கிக்கொள்ள நிச்சயித்துக்கொள்ள வேண்டும். முக்யமாக இராத்ரி தூங்குவதற்குமுன், மற்ற எல்லா வேலைகளையும் முடித்தபிறகு, ஒரு தடவை மனஸைச் சாந்தமாகச் செய்துகொண்டு தனிமையாக உட்கார்ந்து, உதயம் ஆரம்பித்தது முதல் தூங்கப்போகும் வரையில் தான் செய்த கார்யங்களையும் எண்ணின எண்ணங்களையும், கோரின கோரிக்கைகளையும் வரிசையாக நினைவுக்குக் கொண்டுவந்து நிஷ்பக்ஷபாதமாக விமர்சித்து பிசகுகளிருந்தால் அப்படிப்பட்ட பிசகுகளை மறுபடியும் செய்யக்கூடாதென்று சாந்த மனதுடன் ஸ்வல்பகாலம் பகவானை ஸ்மரித்து நித்ரை செய்யவேண்டும். ஹிந்துக்களில், த்விஜர்கள் செய்யும் ஸந்த்யாவந்தனத்தில் ப்ரதி உதயத்திலும் முன் ராத்ரி செய்த பாபங்களை ஞாபகத்திற்குக் கொண்டுவந்து பகல் செய்த பாபங்களை ஸாயங்காலத்தில் ஞாபகம் செய்துகொண்டு ஈச்வரத்யானத்துடன் அவைகளைத் துலங்கும்படி செய்து கொள்ளவேண்டுமென்று பெரியோர்கள் உபதேசம் செய்திருக்கிறார்கள்.

பாபேப்⁴யோ ரக்ஷந்தாம் । யத்³ராத்ர்யா பாபமகார்ஷம் । மநஸா வாசா ஹஸ்தாப்⁴யாம் । பத்³ப்⁴யாமுத³ரேண ஶிஶ்நா । ராத்ரிஸ்தத³வலும்பது । யத்கிஞ்ச து³ரிதம் மயி । இத³மஹம் மாமம்ருதயோநௌ । ஸூர்யே ஜ்யோதிஷி ஜுஹோமி ஸ்வாஹா ।

யத³ஹ்நா பாபமகார்ஷம். ... ... ... ...

மறுபடியும்,

யத³ஹ்நாத்குருதே பாபம் தத³ஹ்நாத்ப்ரதிமுச்யதே,
யத்³ராத்ர்யாத்குருதே பாபம் தத்³ராத்ர்யாத்ப்ரதிமுச்யதே.

என்ற வாக்யங்களெல்லாம் ராத்ரி செய்த பாபங்களை உதயத்திலும், பகல் செய்த பாபங்களை ஸாயங்காலத்திலும் ஞாபகத்திற்குக் கொண்டுவந்து அப்படிப்பட்ட பாபங்களை மறுபடியும் செய்யக்கூடாதென்று நிச்சயம் செய்து கொள்வதைத் தான் உத்தே

சிக்கின்றன. அப்படிக் கொஞ்சமாகிலும் நெறியாக விசாரிக்காமல் "உலக்கைப் பாட்டாக" வாக்கியங்களைப் பாடிவிட்டால் ஸந்த்யா வந்தனம் பலனைத் தருவதாகாதென்பதற்கு ஸந்தேகமில்லை. இப்படித்தான் அஹோராத்ரங்களில் செய்யும் தோஷங்களை பரிக்ஷை செய்து பச்சாத்தாபத்தால் மனஸ்ஸை நிர்மலமாகச் செய்துகொள்ளவேண்டும். அப்படிச்செய்த பிறகு நிலையான மனதுடன் ஈசுவரனை த்யானித்து நித்திரை செய்யவேண்டும்.

## ராத்ரிஸந்த்தம்.

இம்மாதிரியாக நித்ரை செய்வதற்குமுன் பகவானை ஸ்மரித்து, அவர் ஸ்மரணையே கடைசி எண்ணமாக மனதில் வைத்து நித்ரித்தால், நித்ரை ஸமயத்தில் சரீரம், அசைவில்லாமலும், வேறு வ்யாபாரமில்லாமலும் விழுந்து கிடக்கும்போது, ஜீவனுக்கு ஈசுவர ஸ்மரணையே முக்யபாவமாக விருக்கும். நித்ரை செய்வதற்குமுன் எந்த எண்ணம் மனதிலிருக்குமோ அந்த பாவமே "ஆலாபன" மாக (ப்ரசனை—வசனம்) ஸ்வப்னரூபமாக ஜீவனை ஓட்டி இருப்பது எல்லோருக்கும் அநுபவத்தால் தெரிந்திருக்கிறது. பகவானை நினைத்துக்கொண்டு அந்த க்ஞாபகத்துடன் தூங்கினால், ஜீவனுக்கு ராத்ரி எல்லாம் அந்த பாவமே உண்டாகி யிருக்கும். ஆகையால் உதயத்தில் தூங்கி எழுந்த ஸமயத்தில் மனஸ்ஸு ஈசுவரனிடத்திலேயே நிற்கும். அந்தக் காரணத்தைக்கொண்டு உடனே ஈசுவரனைத் தியானம் செய்ய ப்ரயத்னித்தால் மனஸ்ஸு ஸுலபமாக நின்றுஏகாக்ர த்யானம் ஸுலப ஸாத்யமாகும். த்யானம் உத்தமமான பலனைத் தரும். அப்படித் தியானம் நிச்சலமாகி வரவரத், தினசர்யையும் பரிசுத்தமாகிக்கொண்டுவரும். இந்த விஷயத்தைப் பூர்வத்தில் ஸர்வக்ஞர்களான ருஷிகள் ஸ்ம்ருதிகளிலும் புராணங்களிலும் விதித்திருக்கிறார்கள்.

"ஶய்யாஶயிஷ்டாய ராத்ரிஸந்த்யாம் ஜபித்வா, விஷ்ணும் ந்யஸ்ய க்ருத்வா, இஷ்டதேவதா ஸ்மரணம் க்ருத்வா, ஸமாஹிதாத்மாய, சந்த்ராநுஶேஷவேதிகாந் ஸம்ஸ்ம்ருத்ய ஸாவித்ரீம் ஜபித்வா ஸ்வபேத் ॥

(ஸ்மிருதி.)

(இன்னும் வரும்.)

# தியானக்கிரம விஷயம்.

## ஜனவரி மாதம்.

### மார்க்கம்.

31வ. சன்மார்க்கத்தில் எடுத்துக்கொள்ளப்படும் ஒவ்வொருபடியும் முடிவாக எடுத்துக்கொள்ளப்பட்ட படியாகும். அம்மார்க்கத்தில் அநுபவிக்கப்படும் ஒவ்வொரு துன்பமும், அதை உணர்ந்தறியும் பக்ஷத்தில், அதனாலுண்டாகும் பாடத்தினிமித்தம் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. நாம் சன்மார்க்கத்தில் செல்லுகையில் அக்ஞான இருள் வர வர நீங்கி ஞானப்பிரகாசம் அதிகமாகின்றது: துர்ப்பலம் மறைந்து சாந்தி வளருகின்றது. இவ்வுலகின் சலன சக்திகள் சஞ்சலப்படுத்தவும் அசைக்கவும் சக்தியை இழக்க இழக்க, அதிக தெளிவு உண்டாகின்றது.

வெளிப் பிரகாசம்.

## பிப்ரவரி மாதம்.

### கைங்கரியம்.

1வ. சிலருடைய நன்மையை மட்டும் உத்தேசித்துச் செய்யாமல்; எல்லோருடைய நன்மையையும் உத்தேசித்து எதைச்செய்கிறாயோ, ஈசுவரபாவத்தில் வாழ்ந்துகொண்டு ஈசுவர கைங்கரியமாக எதைச் செய்கிறாயோ, அந்தக்காரியம் மட்டுந்தான் உன்னை பந்தப்படுத்தாது. ஏனெனில், அது தியாக ரூபமான காரியம். அதற்கு பந்தப்படுத்தும் சக்தியில்லை. அவ்விதமான செய்கையைத்தான் நாம் கைங்கரியம் என்று சொல்கிறோம்.

பிரம்மஞானியின் கடமைகள்.

2வ. கைங்கரியம் (ஸேவை) என்பது மற்றொருவருக்கு அன்பின் நிமித்தம் செய்யப்படுவதுதான். பிரதிபலனை யுத்தேசித்துச்செய்வது யதார்த்த கைங்கரியம் அல்ல.

பிரம்மஞானியின் கடமைகள்.

3வ. நீ பாரமார்த்திக வாழ்வை அனுஸரிப்பாயாகில் நீ மேலே நோக்குவதுபோல் கீழேயும் நோக்கவேண்டும். ஞானியுடன் உன் ஒற்றுமை பாவனையை யுணர்வதுபோல் பாவியினிடமும் உணரவேண்டும். ஏனெனில், ஒவ்வொருவருடைய ஹிருதயத்திலும் ஒரே மாதிரியாக இருக்கும் ஆத்மா தான் உன்னை தெய்வத்தன்மையாக்கும் ஒரே வஸ்து. ஆத்மாவின் தெய்வத்தன்மையில் வித்தியாஸம் கிடையாது. விகாஸ முறையில் ஏற்படும் படிக்கிரமத்தில்தான் வித்தியாசமுளது.

லண்டன் நகரத்தில் கொடுத்த உபந்யாஸங்கள்.

4வ. நாம் சந்திக்கும் எல்லோருக்கும் ஒவ்வொருவருக்கும் நாம் செலுத்தவேண்டிய கடமை ஏற்பட்டிருக்கிறது. நமது உலக வாழ்வில் நம்மிடம் வரும் மனிதர்களில் ஒருவருக்காவது நாம் செலுத்தவேண்டிய கடமை ஏற்படாமலிராது. உலகமானது தற்செயலாய் ஆளப்படுவதில்லை. மனிதர்களின் வாழ்வில் தற்செயலான சம்பவங்கள் நேரிடுவது கிடையாது.

உயர்வாழ்வின் தர்மம்.

5வ. நாம் ஒருவர்க்கொருவர் உதவிசெய்யவும், ஒருவரையொருவர் நேசிக்கவும், ஒருவரையொருவர் உயர்த்தவுமன்னியில் வேறு எதற்காக நாம் இவிடம் இருக்கிறோம்?

உயர்வாழ்வின் தர்மம்.

6வ. உன் வாழ்வானது மற்றவர்களுடைய வாழ்வை எவ்விதம் மாற்றுகிறதென்று கவனி. உன்னுடைய வார்த்தை மற்றவர்களுடைய வாழ்வை எவ்விதம் மாற்றும் என்ற விஷயத்தில் கவனமாயிரு. உன்னுடைய நாக்கு மிருதுவானதாகவும் உன் வார்த்தைகள் அன்பு மிகுந்ததாகவும் இருக்கவேண்டும். பாரமார்த்திக வாழ்விற்குக் கருவியாய் ஏற்படவிருக்கும் மனிதர்களுடைய பேச்சு, கோட் சொல்லுதல், வம்புப்பேச்சு, கடுமையானபேச்சு, பக்ஷமற்ற கருத்து இருக்கிறதென்ற சந்தேகம், இவைகளால் அசுத்தப்படாமலிருத்தல்வேண்டும்.



210812

உயர்வாழ்வின் தர்மம்.

7வ. உன்னுடைய வருத்தத்தை நீ உணருவதுபோல் மற்றவர்களுடைய விசனத்தையும் நீ உணரவேண்டும். உன்னுடைய ஹிருதயம் வருத்தப்படுவதை நீ உணருவதுபோல் மற்றவர்களுடைய துன்பத்தையும் நீ உணரவேண்டும்.

தீக்ஷாமார்க்கம்.

8வ. கைங்கரியத்தில் ஆவலும், மற்றவர்களை சந்தோஷப்படுத்துவதற்காகத் தன்னிடமுள்ள ஸகலத்தையும் கொடுத்துவிடப் பிரியமும் எங்கு காணப்படுகின்றனவோ, என்ன உதவிசெய்யக் கூடுமென்றும் யாருக்குத் தாங்கள் ஸேவை செய்யக் கூடுமென்றும் ஸதா நினைத்துக்கொண்டிருக்கும் மனிதர்களும் எங்கு காணப்படுகிறார்களோ அங்கெல்லாம் அந்தராத்மாவானது வியக்தமடைந்திருப்பதாக நீ அறிந்துகொள். இவ்விதமாய் வெளிப்படுவதே அந்தராத்மாவின் சுபாவம். மனிதர்களுக்கு ஸேவை புரிவதுதான் அதன் யக்ஞம்.

தீக்ஷாமார்க்கம்.

9வ. ஸேவைக்காக உன்னையே முற்றிலும் தியாகம் செய்துகொள்; ஒன்றையும் உனக்கென்று வைத்துக்கொள்ளாதே. எங்கெங்கே கூடுமோ அங்கெல்லாம் உதவிசெய்; வேலைசெய்ய சந்தர்ப்பம் நேரிடுகையில் வேலைசெய். உயர்ந்த லக்ஷியத்திற்கு உன்னை அற்பணம் செய்து விடு.

தீக்ஷாமார்க்கம்.

10வ. ஸர்வத்தையும் கொடுப்பதும் பிரதிப் பிரயோஜனத்தை எதிர் பாராததுமான அந்த சுயநலமற்ற ஸேவைதான் அவசியம் வேண்டற்பாலது என்று அறிந்துகொள்.

தீக்ஷாமார்க்கம்.

11வ. வருத்தப்படுகிறவனிடம்போய் நீ அவன் வருத்தத்தை நிவர்த்திசெய்; ஆனால் அவன் வருத்தத்தை நிவர்த்

திசெய்தல் என்னும் விஷயமானது உன் ஹிருதயத்தை உருக்கி, அவ்வருத்தத்தின் காரணத்தை நீ விலக்குகிறவரையில் அது உன்னிடம் இடைவிடா விசாரமாக இருக்கட்டும். இதுவே வேற்றுமை பாவத்தை நீக்குவதில் முதல்படியாகும். உலகத்தின் ஸகல துக்கங்களுடன் உன்னை ஒருமைப்படுத்திக்கொள். ஒவ்வொருவருடைய துக்கமும் உன்னுடைய துக்கமாகவும், ஒவ்வொருவருடைய கஷ்டமும் உன்னுடைய கஷ்டமாகவும், ஒவ்வொருவருடைய ஸந்தோஷமும் உன்னுடைய ஸந்தோஷமாகவும் ஆகட்டும்.

குருநாதர்கள்.

12வ. நீ ஓர் இயக்கம் அல்லது சங்கத்தில் பிரவேசிப்பதற்குமுன், "அது அபிவிருத்தி நோக்கத்தோடு கூடிய நிர்மாண காரியங்களைச் செய்யக்கூடியதா?" என்று உன்னைக் கேட்டுக்கொள். அது அப்படிப்பட்டதல்லவாயின் அதில் பிரவேசியாதே. அதின் நோக்கம் அன்புதானா? அதின் நோக்கம் பகை என்று நீ கண்டால் அதை விட்டு நீ விலகிக்கொள். அது ஸகோதர பாவத்திலும், உயர்வு தாழ்வு என்ற வித்தியாச வுணர்ச்சியைக் குறைப்பதிலும், உத்தரவாத உணர்ச்சியை அதிகப்படுத்துவதிலும் நோக்கமுள்ளதாயிருக்கின்றதா? அந்த இயக்கம் அவ்விதம் உள்ளதானால் அதற்காக வேலைசெய். இல்லாவிடில், அதை விட்டு விடு.

காலமும் வேலையும்.

13வ. விகாஸமுறையில் நமக்குக் கீழ்ப்படியிலிருக்கும் தாழ்ந்த வகுப்பிலுள்ள ஜீவராசிகளைப் பழக்குவதற்காகவும், நடத்துவதற்காகவும், அவைகளுக்கு உதவிசெய்வதற்காகவும் நாம் இவ்விடத்திலிருக்கிறோம். குரூரத்தினாலும், கொடுமையினாலும், எவ்வித இரக்கமற்ற தன்மையினாலும் அவைகளுக்கு நாம் தீங்கிழைத்தால், அவைகளுக்குள்ளிருக்கும் ஈசுவரனுக்கே பாபம் செய்தவர்களாவோம்.

சிஷ்ய மார்க்கம்.



14வ. நம்மால் கூடியவரையில் அதிக விவேகத்துடன் வேலை செய்வோமாகில், மனித ஸேவையில் நம்முடைய உன்னதமான எண்ணம், உயர்ந்த முயற்சி இவைகளை அன்பின் நிமித்தம் செலுத்துவோமாகில், அப்பொழுது அதனுடைய முடிவைப்பற்றி நாம் இச்சிக்கிறதில்லை. நம்முடைய அறிவீனத்தாலும் துர்ப்பலத்தாலும் பாதிக்கப்படாமல் உயர்ந்த ஆத்மார்த்த சக்திகள் தடையின்றி வேலைசெய்யக்கூடிய அவகாசத்தை குருநாதர்களுக்கே விட்டு விடுகிறோம்.

பக்தியும் பாரமார்த்திக வாழ்வும்.

15வ. எந்த நிமிஷத்திலாவது நம் முன்பாகத்தோன்றும் மனிதன் யாரோ, அவனுக்கு அந்த வேளையில் நாம் ஸேவை செய்வதற்காகக் குருநாதனால் அனுப்பப்பட்டவர்கள் என்பதை நாம் மறக்கக்கூடாது. அஜாக்கிரதையினாலாவது, அவசரத்தினாலாவது, அலக்ஷியத்தினாலாவது, நாம் அவனுக்குதவி செய்யத்தவறினால் நாம் குருநாதன் கைங்கரியத்தில் தவறிவிட்டவர்களாவோம்.

ஹிருதயத்தின் உபதேச முகவுரை.

16வ. ஒருமனிதன் கைங்கரியத்தினால் போதுமானபடி சிறப்பை அடைகையில் அவன் தன் குருநாதனைக்கண்டு கொள்கிறான்—குருநாதனே இவனைக் கண்டுபிடித்ததாகச் சொல்லலாம். இவ்விதம் அவன் தன் மார்க்கத்தில் போராடிக்கொண்டிருந்த காலங்களிலெல்லாம் குருநாதனின் கிருபாகடாக்ஷம் பொருந்திய கண்கள் இவன் அபிவிருத்தியை கவனித்து வந்திருக்கின்றன. எந்த அநுக்ரஹமானது இந்த ஜன்மத்தில் இவனுக்கு பிரபலமாக ஏற்படப்போகிறதோ, அதே அநுக்ரஹமானது முன் பல ஜன்மங்களிலும் இவனுக்கு லபித்திருந்தது.

தீக்ஷாமார்க்கம்.

17வ. ஒரு புருஷன் அல்லது ஸ்திரீ மற்றவர்களுக்கு ஏதாவது ஒருவித கைங்கரியம் செய்வதாக ஸங்கல்பித்துக் கொண்டாலொழிய நம் சங்கத்தைப்போன்ற ஒன்றில் பூரண

மான அங்கத்தினராக உண்மையில் ஆகமுடியாது. ஆத்மாவின் ஸ்வபாவம் ஸதா கொடுப்பதாகவே யிருக்கிறது. உன்னிடம் வரும் ஆத்மசக்தியை நாலுபக்கத்திலும் நீ அனுப்பினாலன்றி மேலேயிருந்து ஆத்மசக்தி உனக்கு வருமென்று நீ எதிர்பார்க்க முடியாது.

(ஒரு சங்கக்கட்டடத்தின் பிரதிஷ்டை உபந்யாஸம்)
15-10-1919.

18உ உயர் நிலையை விரும்பும் ஒவ்வொருவனுடைய நோக்கமும் மற்றவர்களுக்குக் கைங்கரியம் செய்யத் தன்னைப் பழக்கிக்கொள்வதும், குருநாதன் அவனுடைய ஹிருதயத்தில் யாதொரு தோஷத்தையும் பாராதபடி தன்னைத்தானே கடுமையாக அப்யசித்துக்கொள்வதும்தான். அப்பொழுது குருவானவர் அவன் கையைப்பிடித்துக்கொண்டு அவனை மேல் நடத்துகிறார்.

ஹிருதயத்தின் உபதேச முகவுரை.

19உ ஸகோதரபாவமானது அன்பு, பயபக்தி, இரக்கம், இவைகளின் முடிவற்றக் கோர்வைகளுடன் உயர்-கீழ் நாலுபக்கங்களிலும் பரவுகின்றது. நமக்கு மேலான ஸ்திதியிலுள்ளவர்களை (குருநாதர்களை) நோக்கி, ஆத்மசக்தியை நம்முடைய கைகளில் ஊற்றும்படி நம்முடைய வெறுங் கைகளை நீட்டும்பொழுது நம்முடைய இளைய சகோதரர்களை ஆசீர்வதித்து நாம் நம்முடைய கையிலுள்ளவைகளை விடுவதற்குத்தக்கபடிதான் நம்முடைய வர்க்கத்தின் மூத்த சகோதரர்களால் மறுபடியும் நம்முடைய கைகளில் ஆத்மசக்தியானது நிரப்பப்படுமென்பதை நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

லண்டன் நகரத்தில் நடந்த 1921-ம் வருஷத்திய கன்வென்ஷன் முடிவுரை.

20உ வேலையின் மஹிமையையும் வேலை செய்பவர்களின் கூட்டத்தையும் நன்கறிந்து கொள்வதும், நமக்கு



மேலேயுள்ள குருநாதர்களுக்கும் நமக்குமுள்ள பாந்தவ்யத்தையும் அப்படியே விகாஸமுறையில் நமக்குக் கீழேயுள்ளவர்களுக்கும் நமக்குமுள்ள உறவையும் உணர்ந்துகொள்வதுந்தான் நாம் வேலைசெய்வதற்குப் பெரும் ஸாதனமாகிறது.

லண்டன் நகரத்தில் நடந்த 1921-ம் வருஷத்திய கன்வென்ஷன் முடிவுரை.

21உ மனிதன் குருநாதனைக் காணவேண்டுமென்ற ஆவலுடன் தேடுவதினாலும், தன் சக்திக்குத்தக்கவாறு தன் ஸேவையை அவருக்கு ஸமர்ப்பிப்பதினாலும், அவருக்கு அதிகத் திறமையுடன் வேலைசெய்யும்பொருட்டு அவரைக் காணவேண்டுமென்ற ஆவலுடன் வேலைசெய்வதினாலும், நெடுநாள் தீர்மானத்துடன் தேடின பின்னர், அவனிடம் இன்னும் மீதியாயுள்ள அஞ்ஞான இருளில் யதார்த்தமான வெளிச்சம் (ஜோதி) உதையமாவதைப் பார்க்கிறான்.

தீக்ஷாமார்க்கம்.

22உ ஞான தீக்ஷாலயத்திற்கு வெளிப் பிராகாரத்திலுள்ள இந்த ஜீவாத்மா, தனக்கு முழுவதும் ஸ்வாதீனப்படாமலிருக்கிற உபாதிகளைச் சுத்தப்படுத்தி வேலைசெய்யத் தொடங்குகிறது. அன்பு செலுத்துவதினால் ஏதாவது பிரதியாக வருகிறதாவென்று கேட்காமலும், அதை அங்கீகரிக்கிறார்களாவென்று பார்க்கக்காத்திராமலும் அன்பானது வெளிக்கிளம்பிப் போகும்வரை அது வேலைசெய்கிறது; ஏனெனில், எந்த இடத்திலிருந்து நாம் செலுத்தும் அன்பிற்குப் பிரதி அன்பு கொஞ்சங்கூட வாராதோ அந்த இடத்தில் தான் அன்பு செலுத்தவேண்டிய அவசியம் மிக்க அதிகமாயிருக்கிறதென்றும், தங்களுக்கு உதவிசெய்யும் அன்புக்குப் பிரதியாக தற்காலத்தில் ஒன்றும் கொடுக்காத ஜீவர்களுக்குத்தான் அன்பைப் பிறரிடமிருந்து பெற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் மிகவும் அதிகமென்றும் அந்த ஜீவாத்மா அறிகிறது.

வெளிப்பிராகாரம்

## வைத்தியசந்திரிகை.

வைத்ய விஷயங்களைப் போதிக்கும் ஓர் உயர்ந்த மாதப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ 2-0-0.

இதன் ஆசிரியர், பண்டித: S. நாராயண அய்யங்கார்.

"வைத்திய சந்திரிகை" ஆபீஸ், கரூர்.

---

## மாருதி.

இதில், சோதிட விஷயங்கள், வர்த்தகப் பகுதி, சுகவாழ்வு நீதிமஞ்சரி, வைத்தியக் குறிப்புகள், நாட்டுப்பாட்டு, தீண்டாமை முதலிய அரிய விஷயங்கள் வெளிவருகின்றன.

ஆசிரியர்;—சோதிட சாஸ்திரி. V. K. சடகோபாச்சாரியார்.

வருஷ சந்தா ரூ 1--0--0 "மாருதி" காரியாலயம்.

தபாற் பெட்டி. நெ. 157, மதராஸ்.

---

## ஆரம்ப ஆசிரியன்.

சென்னை மாஹாண ஆரம்ப ஆசிரியர் மானேஜர்கள் சங்கத்தாரால் வெளியிடப்படும் சிறந்த மாதப்பத்திரிகை. ஆசிரியர்: M. ஷண்முகஸுந்தர முதலியார். M. A. L. T. வருஷ சந்தா ரூ 1—0—0 "ஆரம்பாசிரியன்" ஆபீஸ்.

200. தம்புச் செட்டித்தெரு, சென்னை.

---

## கற்பகம்.

இதில், கல்வி, சாஸ்திரம் சுகாதாரம், கைத்தொழில் வேதாந்தம், இராஜாங்க ஜனங்களின் திருத்தங்கள், சிறுவர் சிறுமிகளுக்கான விஷயங்கள் ஆகிய பல அரிய விஷயங்கள் வெளிவருகின்றன. வருஷ சந்தா ரூ 1—0--0

மானேஜர் "கற்பகம்" ஆபீஸ், புதுச்சேரி,

---

## தொழிற் கல்வி.

நம் நாட்டிற்கு இன்றியமையாத தொழிற் கல்வியைப் புகட்டும் ஓர் சிறந்த மாதாந்தப் பத்திரிகை. ஆசிரியர்: அ ராமஸ்வாமி அய்யர் மெக்கானிகல் இஞ்சினியர். திருவிடைமருதூர் வருஷ சந்தா. ரூ 4—0—0 தொழிற் கல்வி ஆபீஸ், திருவிடைமருதூர்.

---

## ஆனந்த குணபோதினி

இஃது, படிப்பவர்களுக்கு நன்னடக்கையும், லௌகீக யுக்தியும் பாஷாஞான சுதேச சிந்தனையும், ஈசுவரபக்தியும், ஆழ்ந்த யோஜனையும் உண்டாகக்கூடிய விதமாய் சொல்நயம் பொருள்நயம் தோன்ற [illegible] பத்திரிகை. ஆசிரிய[illegible] நாயுடு. வருஷ சந்தா [illegible]

தி. இராஜகோபால் முதலியார்.

302. தங்கச்சாலைத் தெரு, மதராஸ்.